

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 111 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 14 – வியாழக்கிழமை 30 நவம்பர் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 111 : Thiruvalluvar Year - 2054 - Karthigai 14 - Thursday 30 November 2023 - Chennai 12 Pages ₹ 5.00


## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (8)

# கரும்பு வெட்டும் தொழிலாளி; இரும்பு நெஞ்சப் போராளி!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

பேரறிஞர் அண்ணா அவர்கள், "இளைஞர்கள் ஒரு இயக்கத்தின் ஈட்டி முனைகள்" என்று கூறியதை வைத்து, 1999ஆம் ஆண்டு, சென்னை கலைஞர் அரங்கத்தில் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ஒரு கூட்டம் நடைபெற்றபோது, பேசிய நான், இளைஞர்கள் ஈட்டி முனைகளாக இருப்பதோடு, இயக்கத்திற்கு ஒவ்வொருவரும் ஆயிரக்கணக்கான மக்களைத் திரட்டிடும் முனைகளாகவும் இருக்க வேண்டுமென்று கூறியிருந்தேன். ஆனால் அரசியலுக்கு வந்துள்ள சில புதிய வரவுகள், நான் ஏதோ இப்போதுதான் இளைஞர்களுக்காக எழுதுவதைப் போல சொல்லிக் கொண்டு திரிகின்றன. 1966ஆம் ஆண்டு இன்று என்னிடம் செயலாளர்களில் ஒருவராக இருக்கும் தம்பி ராஜமாணிக்கம், ஐ.ஏ.எஸ்., உள்ளிட்டோர் எடுத்த முயற்சியின் காரணமாகத் தஞ்சையில் மாணவர் அணியின் சார்பில் மாநாடு ஒன்று நடைபெற்றபோது, அண்ணா அவர்கள் மேடைக்கு வந்தார்கள். மேடையில் கழகத்தின் மூத்தவர்கள் எல்லாம் அமர்ந்திருந்தார்கள். உடனே அண்ணா, கழகத்தின் மூத்த தலைவர்களையெல்லாம் பார்த்து, இது மாணவர்கள் நடத்தும் மாநாடு, எனவே நீங்கள் எல்லாம் எதிரே சென்று அமர்ந்து கொள்ளுங்கள் என்று கூறி அந்த இடத்தில் மாணவர் அணியினைச் சேர்ந்தவர்களையெல்லாம் அமரச் சொன்னார்.

மேலும், அங்கே கழகத்தின் மூத்த தலைவர்கள் யாரும் உரையாற்ற வேண்டாமென்றும், மாணவர் அணியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பேச வேண்டுமென்றும், அவர்களின் உரையைக் கேட்பதற்காகத் தான் வந்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். நாற்றங்கால் வளமாக இருந்தால்தான் பயிர்கள் செழிப்பாக வளர்ந்திட முடியும். ஒரு இயக்கத்தின் நாற்றங்கால்தான் இளைஞர் சமுதாயம். இளைஞர் சமுதாயம் எந்தவொரு இயக்கத்தில் பலமாக இருக்கின்றதோ, அந்த இயக்கம்தான் வலுவாக வளர இயலும். நான் தொடர்ந்து எழுதி வருவதைப் போல, அகில உலகத் தலைவர்கள் எல்லாம் இளைஞர்களாக இருந்த போது சாதித்த சாதனைகள்தான், அவர்கள் வயது முதிர்ச்சியுற்ற பிறகு ஆற்றிய சாதனைகளை மிஞ்சியவை ஆகும்.

அந்த வரிசையில்தான் பிடல் காஸ்ட்ரோவின் அருமைத் தோழன் சேகுவாராவைப் பற்றி இன்றைய கடிதத்தில் எழுதுவதாகக் குறிப்பிட்டிருந்தேன்.

சேகுவாராவைப் பற்றி மட்டும் எத்தனை நாட்களுக்கு வேண்டுமானாலும், எத்தனை கடிதங்கள் வேண்டுமென்றாலும் எழுதிக் கொண்டேயிருக்கலாம். இதைத்தான் எழுத்தாளர் காப்ரியில் கார்சியா மார்கோஸ் **"இலட்சக்கணக்கான பக்கங்களில், ஆயிரம் வருடங்கள் வேண்டுமானாலும் எழுதிக் கொண்டிருக்கலாம்"** என்று குறிப்பிட்டார்.

நள்ளிரவில் அரண்மனையைவிட்டு வெளியேறினான் புத்தன். அவனுக்கு ஞானத்தின் கதவுகள் திறந்தன. ஒரு முப்பதாண்டுக் காலம் இயேசுவும் உலகம் முழுவதும் சுற்றி வந்ததாகக் கூறப்படுவதுண்டு. தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பிய அண்ணல் காந்தியடிகளுக்கும், இந்திய மக்களின் இதயத்துடிப்பை அறிந்திட ஓர் இரண்டாம் வகுப்பு இரயில் பயணம் தேவைப்பட்டது. மாசேதுங்கின் சீனப்புரட்சி ஒரு நீண்ட பயணமாகவே நிகழ்த்தப்பட்டது. அதைப்போலவே, இருபத்தி மூன்று வயது நிரம்பிய சேகுவாரா மோட்டார்

**கலைஞர் கடிதம்**

சைக்கிளில் பசிபிக் கடலோர நாடுகளுக்குப் பயணம் சென்றார். அந்தப் பயணத்தைப் பற்றி அவர் தனது அன்னையாருக்கு எழுதிய கடிதத்தில், **"ஒரு புரட்சிக்காரனின் தேவைகள் என்ன? வலிமை வாய்ந்த கால்கள், எளிமையான சுமை, ஒரு பிச்சைக்காரனின் வயிறு."** பயணம் சென்றபோது இலத்தீன் அமெரிக்காவின் அழகோடு, அதன் மக்களை அதன் உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளைத் தனது சொந்தக் கண்களால் நேரடியாக அறிந்து கொண்டார் சேகுவாரா என்கிற அந்த இலட்சிய இளைஞர்.



**இளம் வயதில் சேகுவாரா**

பிற்காலத்தில் எதேச்சாதிகாரத்திற்கும், அதிகார துஷ்பிரயோகத்திற்கும், எளியோர் உரிமைகளைப் பறிக்கும் தன்னல ஆட்சியாளர்களுக்கும் எதிராகப் போராடுகின்ற புரட்சியாளர்களுக்கும், போராளிகளுக்கும் தள நாயகனாக மாறப்போகிற சேகுவாராவின் எதிர்காலப் போராட்டக் கூறுகளுக்கு முன்னோட்டமாக இந்தப் பயணம் அமைந்தது. இந்தப் பயணத்தைப் பற்றி சேகுவாரா எழுதுகையில், நமது மக்களின் ஏழ்மையை, பசியை, அவர்களைப் பீடித்திருக்கும் நோய்களை நெருக்கமாகச் சென்று பார்த்ததாலேயே, தன்னால் இந்த அரசியல் சூழலில் ஒரு முழுநேர மருத்துவராக மனசாட்சிப்படி பணியாற்றவே முடியாது என்பதையும், மக்களின் நோய்களைத் தீர்ப்பதற்கு முன் அவர்கள் வாழ்வைக் கவ்வியிருக்கும் நாசகாரச் சக்திகளை ஒழிப்பதுதான் முதல் வேலையாக இருக்க

**தொடர்ச்சி 3 ஆம் பக்கம்**

## கன மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில்

# அமைச்சர்கள் உள்ளிட்டோர் நிவாரணப் பணிகளை மேற்கொள்வீர்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**சென்னை,நவ.30–**

**''கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர்கள் உள்ளிட்டோர் நிவாரணப் பணிகளை மேற்கொள்வீர்'' என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.**

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், சென்னை உள்பட மாநிலம் முழுவதும் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. தொடர்ந்து, அடுத்த 3 நாள்களுக்கு கன மழை எச்சரிக்கையும் விடுக்கப் பட்டுஉள்ளது.

இதனிடையே தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் நேற்று கன மழை கொட்டித்தீர்த்தது. ஒரு மணி நேரத்தில் 8 செ.மீ வரை மழை பெய்தது.

**பள்ளிகளுக்கு விடுமுறை!**

கனமழை காரணமாக சென்னை உள்பட 4 மாவட்டங்களுக்கு பள்ளிகளுக்கு மட்டும் இன்று (நவ.30) விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் தொடர்ந்து மிக கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



இந்த நிலையில் தொடர் கன மழை காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்ட பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வடகிழக்குப் பருவமழையை தொடர்ந்து பேருந்துகளில் பராமரிப்பு அவசியம் என போக்குவரத்து கழகங்களுக்கு தமிழ்நாடு அரசு அறிவுறுத்தி உள்ளது. அதன்படி, அரசு பேருந்துகளில் உரிய பராமரிப்பை உறுதி செய்ய வேண்டும். பேருந்தின் உட்பகுதிகளில் மழைநீர் புகுவதை தடுக்க பணிமனைகளில் முறையான பராமரிப்பு அவசியம். மேற்கூரை, படிக்கட்டுகளை தொடர்ந்து கண்காணித்து பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்த வேண்டும் என போக்குவரத்துக் கழகங்களுக்கு தமிழ்நாடு அரசு அறிவுறுத்தி உள்ளது.

சென்னையில் பலத்த மழை பெய்து வருவதால் மக்கள் தேவையின்றி வெளியே வர வேண்டாம் என்று மாநகராட்சி அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இந்த நிலையில் மழை பாதித்த இடங்களில் தேவையான உதவிகளைச் செய்ய அமைச்சர்களுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

**மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.**

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 30-11-2023

# சமூக நீதியில் அடைய வேண்டியவை!

சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களது சிலைத் திறப்பு விழாவில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூகநீதி வரலாற்றில் நாம் அடைய வேண்டிய இலக்குகளை விரிவாகப் பட்டியலிட்டுள்ளார்கள்.

★ கல்வி நிறுவனங்களில் ஓ.பி.சி. இடஒதுக்கீடு 2006க்கு பிறகுதான் நடைமுறைக்கு வந்தது.

★ பல்கலைக்கழக மானியக்குழு இணை இயக்குநர் பதவிக்கு இடஒதுக்கீடே கிடையாது. எல்லாமே பொதுப்பிரிவு!

★ ஒன்றிய அரசின் துறைச் செயலாளர்கள் 89 பேரில் பட்டியலினப் பிரிவைச் சேர்ந்தவர் ஒரே ஒருவர், பழங்குடிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் 3 பேர். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் கூட கிடையாது!

★ ஒன்றிய அரசு துறைகளின் கூடுதல் செயலாளர்கள் 93 பேரில், பிற்படுத்தப்பட்டவர் ஒருவர் கூட கிடையாது!

★ ஒன்றிய அரசு துறைகளின் இணைச் செயலாளர்கள் 275 பெயரில், 19 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள்!

★ அசாம், உத்தரப் பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்கண்ட் உள்ளிட்ட பல மாநிலங்களில் இருக்கின்ற மத்திய சட்டப் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கையில் இந்த ஆண்டு வரை இடஒதுக்கீடே இல்லாத நிலைதான் நீடிக்கிறது.

★ 45 மத்தியப் பல்கலைக்கழகங்களில், பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பேராசிரியர்கள் 4விழுக்காடு மட்டுமே.

★ 2018 முதல் 2023 வரை நாடு முழுவதும் உயர்நீதி மன்றங்களில் நியமிக்கப்பட்ட 604 நீதிபதிகளில், 72 பேர் மட்டும்தான் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள்.

★ உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு முறை அமல்படுத்தப்படவில்லை.

★ அரசுத் துறைகளின் பதவி உயர்வுகளின் போது இடஒதுக்கீடு முறை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

★ தாமதப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பை அந்தக் கணக்கெடுப்பின்போது சாதிவாரி கணக்கெடுப்பையும் ஒன்றிய அரசு நடத்த வேண்டும்.

★ பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முழுமையாக முறையாக வழங்கப்படவேண்டும்.

★ பட்டியலின பழங்குடியின மக்களுடைய இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்படவேண்டும்.

★ சிறுபான்மையினர் இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்பட வேண்டும்.

★ இதையெல்லாம் அகில இந்திய ரீதியில் கண்காணித்து, உறுதி செய்ய அனைத்துக் கட்சி எம்.பிக்கள் கொண்ட குழு அமைக்கப்படவேண்டும். இதனையெல்லாம் அகில இந்திய அளவில் சமூகநீதியில் ஆர்வம் கொண்ட அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒற்றுமையாக இணைந்து மக்கள் நலனுக்காகச் செயல்படவேண்டும்.

இவைதான் மாண்புமிகு முதலமைச்சர் வைத்த இலக்குகள் ஆகும். கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய இரண்டும் இதில் மிக முக்கியமானவையாக அமைந்துள்ளது. கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய இரண்டுக்குமான தடையை உடைத்தால் போதும், அதுவே அடுத்தடுத்த வெற்றியை உருவாக்கித் தரும். இதனை தான் வி.பி.சிங் சொன்னார்.

**“கல்வி வேறு, அறிவு வேறு. அந்த அறிவு மனிதனுக்கு அதிகாரத்தைத் தர இருக்கிறது. அப்படி அறிவு அதிகாரத்தைத் தருகிறது என்பதை ஈராயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே ‘அவர்கள்’ உணர்ந்தார்கள். அதனால்தான் அதிகாரத்தைத் தங்கள் கையிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று கருதி, ஒன்றைச் செய்தார்கள். மற்றவர்கள் படித்து அறிவு பெறக் கூடாது என்று நினைத்தார்கள். அப்படி நினைத்ததால்தான், சூத்திரர்கள் வேதத்தைப் படித்தால், அவர்கள் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு அறிவுத் துறையைத் தங்கள் கையிலே ஏகபோகமாக வைத்துக் கொண்டார்கள்.**

**ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை, தொழில் நுணுக்கங்களைக் கொடுக்க மறுத்தார்கள். இருந்த போதிலும் தானாகவே முயன்று ஏகலைவன் (வில் வித்தையைக்) கற்றுக் கொண்டான். அவனது கட்டை விரலையே வெட்டி விட்டார்கள். பணத்தை தருவார்கள், பொருளைத் தருவார்கள், கல்வியை மட்டும் தர மாட்டார்கள்”** என்பதை தெளிவுபடுத்தி பேசினார் வி.பி.சிங் அவர்கள்.

“ஒரு குடும்பத்தில் அண்ணன் தம்பிகளிடையே பாகப் பிரிவினை நடந்தது. வீட்டில் இருந்த ஒரே மாட்டையும் இரண்டாகப் பிரித்துவிட வேண்டும் என்றார்கள். மாட்டின் தலைப்பகுதி தம்பிக்கும் பின்பகுதி அண்ணனுக்கும் பிரிக்கப்பட்டது. தம்பியின் கடமை ஒவ்வொரு நாளும் தலைப் பகுதியிலுள்ள வாய்க்கு மாட்டின் தீவனம் போட வேண்டும். அண்ணனோ ஒவ்வொரு நாளும், பின் பகுதியிலுள்ள மாட்டின் மடியிலிருந்து பால் கறந்து கொண்டே இருந்தார். எத்தனை காலத்துக்குத்தான் இந்த அநீதியை தம்பி சகித்துக் கொண்டிருப்பான்? ஒரு நாள் அண்ணன் பால் கறந்து கொண்டிருக்கும்போது தம்பி, தலைப்பகுதியிலிருந்த கொம்பைப் பிடித்து ஆட்டி விட்டான். அவ்வளவுதான்; இத்தனை ஆண்டுகாலம் தீனி போடாமலேயே பாலை மட்டும் கறந்து கொண்டிருந்த அண்ணனை மாடு எட்டி உதைத்தது. அண்ணன் இது அநீதி; அநியாயம் என்று அலறுகிறான். அந்தக் கொம்பைப் பிடித்து ஆட்டிய வேலையைத்தான் நான் செய்தேன்” என்று சொன்னவர் வி.பி.சிங் அவர்கள்.

இன்றைக்கு இடஒதுக்கீட்டுக்கு வேட்டு வைக்கத் துடிப்பது இதனால் தான். நீட் தேர்வைக் கொண்டு வந்து மருத்துவக் கனவை சிதைத்துவிட்டார்கள். புதிய கல்விக் கொள்கையானது அனைவரையும் தரநீக்கம் செய்யும் கல்வியாக மாறப் போகிறது. ‘ஒரே தகுதி முறை’ என்பதன் மூலமாக அனைவரையும் பலவீனப்படுத்தப் பார்க்கிறார்கள். இவை அனைத்தையும் உடைக்கும் ஒரே ஆயுதமாக இருக்கப் போவது சமூகநீதி எனப்படும் இடஒதுக்கீடு முறையே ஆகும்.

**பட்டியலின பழங்குடியின மிகவும் பிற்படுத்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையின மகளிர் மாற்றுத்திறனாளிகள் திருநங்கையர் விளிம்பு நிலை மக்கள் அனைவர்க்கும் இடஒதுக்கீடு வழங்கி அதிகாரத்தை சமப்படுத்த வேண்டும். அனைத்து தரப்பட்ட மக்களும் பங்களிப்பதே அதிகாரச் சமநிலை ஆகும். அதனை நோக்கிய இலக்குகளையே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்துள்ளார்கள். ‘இந்தியா’ கூட்டணி ஆட்சி அமையும் போது இவை சமூகநீதி இலக்குகளாக நிச்சயம் அமையும்.**

●●

## கிண்டி காந்திமண்டப வளாகத்தில் – திராவிடப் பேரொளி

# அயோத்திதாசப் பண்டிதர் திருவுருவச் சிலை – மணிமண்டபம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்!

சென்னை, நவ.30-

தமிழ்நாடு அரசின் சார்பில், திராவிடப் பேரொளி அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் 175வது ஆண்டு விழாவின் நினைவாக 2 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 1.12.2023 அன்று காலை 10.30 மணியளவில் திறந்து வைத்து சிறப்பிக்கவுள்ளார்.

திராவிடப் பேரொளி அயோத்திதாசர் 1845 ஆம் ஆண்டு மே 20 ஆம் நாள் அன்றைய மெட்ராஸ் மாகாணத்தில் உள்ள தேனாம்பேட்டை ஆயிரம் விளக்கு பகுதியில் பிறந்தார்.

தமிழ், ஆங்கிலம், பாலி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றறிந்தார். சித்த மருத்துவம் பயின்று, சிறந்த சித்த மருத்துவராக விளங்கினார். தனக்கு தமிழ் கற்றுக் கொடுத்த ஆசிரியர் வல்லக்காலத்தி அயோத்திதாசர் எனும் தனது ஆசிரியர் பெயரையே தன் பெயராகவே மாற்றிக் கொண்டார். இவர் சிறந்த எழுத்தாளர், ஆய்வாளர், வரலாற்று ஆசிரியர், பதிப்பாளர், மருத்துவர், பேச்சாளர், மொழியியல் வல்லுநர், பன்மொழிப் புலவர் என்ற பன்முக ஆற்றலைக் பெற்றிருந்தார்.

அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள் ஏற்றத்தாழ்வு மிக்க சமூகங்களை கண்டு வெகுண்டெழுந்து சமூக சீர்திருத்த பாதையில் தனது பயணத்தை தொடங்கி சாதி ஒழிப்பையும், சமூக விடுதலையையும் தனது லட்சியமாக கொண்டிருந்தார். தந்தை பெரியார் அவர்கள், அயோத்திதாசப் பண்டிதரை பற்றி குறிப்பிடும்போது, “என் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும், சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடி” என்று கூறினார்.

### தென்னிந்திய சமூக சீர்திருத்தங்கள்!

அயோத்திதாசர் சாதி, மத வேறுபாடுகளை நீக்கி தமிழன் என்ற உணர்வு அனைவரிடத்திலும் இருக்க வேண்டுமென்றார். ஒரு பைசா தமிழன், திராவிடப் பாண்டியன் போன்ற இதழ்களை நடத்தி வந்தார். தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்ற சமயங்களில் சமூகம், சாதியால் பிளவுற்று இருந்த போது இந்தியாவின் விடுதலை முதலில் ஏற்றத்தாழ்விலிருந்து கிடைக்க வேண்டுமென்று கூறினார்.

சாதியால், மதத்தால், இனத்தால், நிறத்தால் உலகம் மாறுபட்டு தள்ளப்பட்ட போது உரிமைக் குரல் கொடுத்த நல்லோர் கள் வரிசையில் அயோத்திதாசப் பண்டிதரை மக்கள் அனைவரும் தென்னிந்திய சமூக சீர்த்திருத்தத்தின் தந்தை என போற்றி புகழ்ந்தனர்.

### மக்கள் உரிமைக்கு பாடுபட்டவர்!

1892 ஆம் ஆண்டு சென்னை மாகாண சங்கம் சார்பில் அரசுக்கு இரண்டு கோரிக்கை வைத்தார். அதில் ஒன்று கல்வி உரிமை, மற்றொன்று நில ஒதுக்கீடு ஆகும். அயோத்திதாசர் தாமே முன்னின்று தாழ்த்தப்பட்ட மக்கள் உரிமைக்கு அரும்பாடு பட்டார். தாழ்த்தப்பட்டவருக்கு கல்வி வசதியோடு உதவித் தொகை மற்றும் அரசு வேலையும், உள்ளாட்சி அமைப்புகளில் வாய்ப்பும் வழங்கிட வேண்டும் என்று வலியுறுத்தி வெற்றி கண்டார்.

திராவிடப் பேரொளி அயோத்திதாசப் பண்டிதரின் எண்ணப்படி, எல்லாரும் எல்லாம் பெற வேண்டும் என்ற நல்ல சிந்தனையோடு செயல்பட்ட அன்னாரின் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை திறந்து வைக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்கள்.

## கேரளா தொடர்ந்த வழக்கு: மாநில சட்டமன்றங்களில் நிறைவேற்றி வைக்கப்படும்

# மசோதாக்கள் மீது ஆளுநர்கள் விரைந்து முடிவு எடுக்க வேண்டும் – உச்சநீதிமன்றம் உத்தரவு!

**புதுடெல்லி, நவ.30-**

**மாநில சட்டமன்றங்களில் நிறைவேற்றி வைக்கப்படும் மசோதாக்கள் மீது ஆளுநர்கள் விரைந்து முடிவு எடுக்க வேண்டும் என்று கேரள மாநில அரசு தொடுத்த வழக்கில் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆளுநர்கள் உரிய நேரத்தில் செயல்படவில்லை என்றால் சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது தொடர்பாக விதிமுறைகள் வகுக்க வேண்டி வரும் என்றும் நீதிபதிகள் எச்சரித்துள்ளனர்.**

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநரை கொண்டு இரட்டை ஆட்சி நடத்த ஒன்றிய பா.ஜ.க அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

ஆளுநர்களின் இந்த நடவடிக்கையை கண்டித்து தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன.

இதில் பஞ்சாப் அரசு தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் ஆளுநர் என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சியில் உள்ள மாநில அரசுகள் நிறைவேற்றும் மசோதாக்களுக்கு காலதாமதமின்றி ஒப்புதல் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

இந்நிலையில் கேரள ஆளுநருக்கு எதிராக அம்மாநில அரசு தொடர்ந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது கேரள அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கே.கே.வேணுகோபால், உச்சநீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வர இருந்த நிலையில் ஒரு மசோதாவிற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்து இருப்பதாகவும், 7 மசோதாக்களை குடியரசு தலைவருக்கு அனுப்பி வைத்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

நிதி மசோதா உள்ளிட்ட 8 மசோதாக்களை ஆளுநர் நிலுவையில் வைத்து இருப்பதாகவும் அவர் கூறினார்.

நீண்ட நாட்களாக மசோதாக்களை நிலுவையில் வைத்து விட்டு 7 மசோதாக்களை குடியரசு தலைவருக்கு ஆளுநர் அனுப்பி வைத்து இருப்பது மேலும் தாமதப்படுத்தும் முயற்சி என்றும் கேரள அரசு சார்பில் வாதிடப்பட்டது. இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், 8 மசோதாக்கள் மீது முடிவு எடுத்துள்ள ஆளுநர், மீதமுள்ள நிதி மசோதா உள்பட 8 மசோதாக்கள் மீது அரசியல் சாசன பிரிவு 200 படி விரைவாக முடிவு எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினர்.

பஞ்சாப் வழக்கில் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிட்ட படி காலதாமதம் இன்றி ஆளுநர் முடிவு எடுக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

### ஒன்றிய அரசின் கோரிக்கை நிராகரிப்பு

ஆளுநர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி சட்டத்தை நிறுத்தி வைக்க முடியாது என்றும் நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர். ஆளுநர்கள் உரிய நேரத்தில் செயல்படவில்லை என்றால் சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது தொடர்பாக விதிமுறைகள் வகுக்க வேண்டி வரும் என்று நீதிபதிகள் எச்சரித்தனர். தொடர்ந்து கூடுதல் கோரிக்கைகளுடன் மனுத்தாக்கல் செய்ய கேரள அரசு அனுமதி கோரியது.

இதற்கு ஒன்றிய அரசு சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. ஒன்றிய அரசின் கோரிக்கையை நிராகரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் கேரள அரசு திருத்திய மனுவை தாக்கல் செய்ய அனுமதி அளித்து வழக்கு விசாரணையை ஒத்தி வைத்தனர்.




# இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (8)

# கரும்பு வெட்டும் தொழிலாளி; இரும்பு நெஞ்சப் போராளி!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

வேண்டும் என்பதை தான் உணர்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனது இருபத்தி ஆறாவது வயதில், தலைமறைவாயிருந்த கியூபா புரட்சியாளர்களைச் சந்தித்தார் சேகுவாரா. 1955இல் பிடல் காஸ்ட்ரோ விடுதலை செய்யப்பட்டதும், சேகுவாரா காஸ்ட்ரோவைச் சந்தித்தார். இருபத்தொன்ப தாவது வயதில் சேகுவாரா புரட்சிப்படையின் மூன்றாவது அணிக்குத் தலைவராக அறிவிக்கப்பட்டார். முதல் அணிக்கு காஸ்ட்ரோவே தலைவராக இருந்தார். அவரது முப்பதாவது வயதில் புரட்சிப்படை வெற்றி அடைந்தது. கியூபா விடுதலைக்கு அவர் ஆற்றிய பணிகளை கவுரவித்து, முப்பத்தொன்றாவது வயதில், கியூபக் குடிமகனாக அறிவிக்கப்பட்டார். கியூபா நிர்வாகத்தில் பங்குபெற்று வந்த சேகுவாரா 1961-இல், அதாவது, அவரது முப்பத்து மூன்றாவது வயதில் கியூபாவின் தொழில்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அவர் அமைச்சராக இருந்தபோது பெற்ற மகிழ்ச்சியை விட, கரும்பு வெட்டுகிற தொழிலாளியாக வேலை செய்த போதுதான் அதிக மகிழ்ச்சியாக இருந்திருக்கிறார். அமர்ந்திருந்தது அமைச்சர் நாற்காலியில் என்றாலும், அவர் மனமோ களம் தேடி அலைந்து கொண்டிருந்தது என்கிறார்கள் அவர் வரலாறு தீட்டியோர்.

அமைச்சராக இருந்து கொண்டே களம் தேடிய அவரால், இயல்பான குடும்ப வாழ்க்கையை நடத்த முடியவில்லை. அலெய்டா மார்க்சை அவர் காதலித்துத் தான் திருமணம் செய்து கொண்டார். அவர் சாதாரண இல்லத்தரசியாக மட்டும் இருக்கவில்லை, அவரது செயலாளராகவும், சக போராளியாகவும் திகழ்ந்தார். ஆனால் அவருக்கு, வரிசையாக நான்கு குழந்தைகள் பிறந்தன. அவர்களை வளர்க்க வேண்டிய பொறுப்பு அலெய்டா மீது மட்டுமே விழுந்தது. நியாய விலைக் கடைகளில் பொருட்களை வாங்க நடந்தோ, பேருந்திலோ போய் வர வேண்டிய நிலைமை. ஓரிரு முறை சேகுவாராவின் அரசு வாகனத்தை மருந்து வாங்கி வர அலெய்டா எடுத்துச் சென்றதை பெரும் தவறு என்று சேகுவாரா கண்டித்தார். **“இந்தக் கார் யார் கார் தெரியுமா? மக்கள் வரிப் பணத்தால் வாங்கப்பட்டது. அதில் மக்கள் பணத்தால் வாங்கப்பட்ட பெட்ரோல் ஊற்றப்பட்டிருக்கிறது. அதை காய் கறி வாங்க நாம் எப்படி பயன்படுத்தலாம்?”** என்று சேகுவாரா கேட்க, மனம் வருந்தி அலெய்டா குழந்தைகளைக் கைகளில் தூக்கிக் கொண்டு பேருந்தில் போய் வந்தார்.

சேகுவாரா தொழில் துறைக்கு அமைச்சராக இருந்தபோதிலும், வங்கிகளைக் கையாளும் பொறுப்பும் அவரிடம்தான் இருந்தது. அவரிடம் பொருளியல் அறிவு இல்லை என்று கூற முடியாது. எனவே அந்தத் துறையையும் அனைவரும் பாராட்டும் வகையிலே நடத்தினார்.

ஆனால் பிறகு எல்லாவற்றையும் ஒரு நாள் துறந்து விட்டு, துப்பாக்கியோடு காடுகளை நோக்கிப் புறப்பட்டு விட்டார். உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு உலகத்தைப் படைக்க வேண்டுமென்ற வேட்கையுடன் தொடங்கிய அந்தப் பயணத்தில், காட்டுப் பூச்சிகள் அவரைக் கடித்ததால் உடம்பு முழுவதும் வீங்கி விட்டதாம். சாப்பிட எதுவும் கிடைக்காமல், கிடைத்த குதிரை மாமிசத்தைச் சாப்பிடுகிறார். அதன் காரணமாக வயிற்று வலி. ஆஸ்த்துமா தொல்லை வேறு. ‘இவ்வளவிற்கும் இடையே ஏகாதிபத்தியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற வேள்வியில் ஈடுபடுகிறார். தன்னைக் காவு கொடுத்துக் கொண்டாவது, மக்களுக்கு வெளிச்சத்தைக் காட்ட வேண்டுமென்ற வெறி அவரது கண்களில் எப்போதும் ஒளிவிட்டுக் கொண்டே இருந்தது.

**“உருவுகண்டு எள்ளாமை வேண்டும் -**
**உருள்பெருந்தேர்க்கு**
**அச்சாணி அன்னார் உடைத்து”**

என்றார் அய்யன் வள்ளுவர். உருவத்தின் சிறுமையைக் கண்டு இகழக் கூடாது என்பதுதான் இந்தக் குறளின் மையக் கருத்து. நேற்று நான் எழுதியதைப் போல கியூபா ஒரு சின்னஞ்சிறிய நாடு. அதன் மக்கள் தொகை அறுபது லட்சம். அந்த நாட்டின் எல்லையைக் கொண்டோ, மக்கள் தொகையைக் கொண்டோ அதனை மதித்து விட முடியாது. உலக அளவில் சிந்திக்கக் கூடிய ஒரு நாடாக இடம் பெற காரணமாக இருந்த - இருக்கிற பிடல் காஸ்ட்ரோ, பல்கலைக் கழக மாணவர் பேரவைத் தலைவராக இருந்தபோது அந்த நாட்டின் வெற்றிக்கான விதையை விதைத்தார். மிகப் பெரிய வல்லரசான அமெரிக்காவிற்குப் பக்கத்திலே மிகச் சிறிய நாடான கியூபா இருந்து கொண்டு, ஏகாதிபத்தியத்திற்கு அடி பணிய மாட்டேன் என்று குரல் எழுப்பி, உலக மக்களையெல்லாம் வியந்து நோக்கச் செய்யும் அளவிற்கு கடந்த ஐம்பதாண்டு காலமாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றது. பிடல் காஸ்ட்ரோவும், அவரது ஆருயிர் தோழரான சேகுவாராவும் 1955ஆம் ஆண்டு ஜூலை அல்லது ஆகஸ்டில்தான் முதன் முதலாக சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி சேகுவாரா எழுதும் போது, **“குளிர் நிறைந்த ஒரு நாள் இரவு, மெக்சிகோ நகரில், அவரை நான் சந்தித்தேன். முதலில் உலக அரசியல் நிலவரங்கள் குறித்து பேசினோம். பொழுது விடியும் முன்பாகவே எனது அடுத்த பயணத்தைப் பற்றிய முடிவுக்கு நான் வந்து விட்டேன். அறிவுக் கூர்மைமிக்க, தன்னம்பிக்கை நிறைந்த, அசாத்திய துணிச்சல் வாய்ந்த இளைஞரை நான் பார்த்தேன். கண்ணீரை நிறுத்தி விட்டு, போராட வேண்டிய நேரம் வந்து விட்டது” என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

இந்தச் சந்திப்பு குறித்து காஸ்ட்ரோ என்ன எழுதினார் தெரியுமா? **“ஒரே நாள் இரவில் நடைபெற்ற உரையாடலில் சேகுவாரா கிராண்மா நோக்கிச் செல்லும் படையில் ஓர் உறுப்பினராகி விட்டார்”** என்கிறார் பிடல் காஸ்ட்ரோ. அப்போது தொடங்கிய சந்திப்பு, இருவரையும் நண்பர்களாக, தோழர்களாக, போராளிகளாக, சகோதரர்களாக, கியூபாவின் வெற்றிக்கு வித்திட்ட வர்களாக உலகத்தின் முன் நிலை நிறுத்தியது.

தொடக்கத்தில் ஒரு குழப்பமான சமுதாய அமைப்பைக் கொண்ட நாடாக விளங்கிய கியூபாவில், புரட்சியை வெற்றிகரமாக நடத்தியதுதான் பிடல் காஸ்ட்ரோவின் வெற்றி. இவரது அன்பு காரணமாக, சேகுவாரா உலக நாடுகள் பலவற்றுக்கும் பயணம் மேற்கொள்ளவும், ஆப்பிரிக்க நாடுகளின் மீது கவனம் செலுத்தவும் முடிந்தது. எகிப்து நாட்டின் அதிபராக இருந்த கமால் அப்துல் நாசர், நெக்ருமா, சிகோதேர, நயாரரே போன்ற பல உலகத் தலைவர்களுடன் சேகுவாரா நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். தனது புரட்சிகரமான எண்ணங்களை இவர்களிடமெல்லாம் அவ்வப்போது பகிர்ந்து கொண்டார். சீனாவின் அதிபரான சூ-என்-லாய் இவருக்கு அளித்த ஊக்கம் அயர்வு போக்கும் அருமருந்தாயிற்று! அடிக்கடி ஊக்கமளித்து வந்தார். கியூபாவின் விடுதலைக்காகத் துப்பாக்கியை கையிலே தூக்கிக் கொண்டு, இவர் பயணம் செய்த தூரம் மிகவும் அதிகம்.

மிக இளம் பருவத்தில், சேகுவாரா, கரும்பு வெட்டும் கூலித் தொழில் புரிவதற்காக சென்றார் என்றறிந்த தாய் செலியா, **“என் மகனே, இறுதியாக கரும்பு வெட்டும் தொழிலுக்குத்தான் அருகதையானவன் என்று கருதிவிட்டாயா? மரணத்தை எதிர்த்துப் போராட தகுதியானவன் அல்லவா நீ? அந்த இடம்தான் உனக்குரியது”** என்று கூறியதாக அந்த நூலாசிரியர் எழுதியிருப்பதை நான் படித்தபோது, புறநானூற்றில் இடம் பெற்ற தமிழ்க் குல தாய்மார்களின் குரல்தான் என் செவிகளில் எதிரொலித்தன. அதே தாய், சில நாட்கள் கழித்து, தன்னுடைய மகனை ராணுவ பள்ளியில் சேர்த்துக் கொள்ளாமல் விலக்களித்து விட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தாளாம். அப்போது அவளை பாசம் கவ்விக் கொண்டது போலும். அப்போதும் அந்தத் தாய், **“நல்லவேளையாக என் மகன் தப்பி விட்டான்! ராணுவப் பயிற்சி என்ற பெயரால் என் மகனை ஏதாவது ஒரு சார்ஜண்டின் மனைவி, காய்கறி வாங்க பையோடு சந்தைக்கு அனுப்பியிருப்பதிலிருந்து தப்பித்துக் கொண்டு விட்டான் அவன். ஆனாலும் அவன் போராடுகின்ற காலம் வந்தே தீரும்”** என்றும் கூறினாராம்.

இந்தத் தாயின் வார்த்தைகள் பின்னர் எப்படி மெய்ப்பிக்கப்பட்டன என்பதை பிடல் காஸ்ட்ரோவின் இளவலும், சேகுவாராவின் நண்பனுமான ரால் காஸ்ட்ரோ - **“சேகுவாராவின் டைரியை படித்த போது ஒரு உன்னதமான புரட்சிக்காரனுடைய குருதியால் இது தீட்டப்பட்டுள்ளது என்பதை உணருகிறேன். அவரது தைரியம், உறுதி, இறுதிவரை போராடுகிற மனோதிடம் ஆகியவற்றின் மீது நான் அபிமானம் கொண்டேன். கொரில்லா குழுவிற்கு தோல்வி ஏற்பட்டது பற்றி எழுதும் போதும் அவர் பெரும் நம்பிக்கையோடு இருந்திருக்கிறார். இறுதிவரை பணிந்து போகாத வீரராக இருந்திருக்கிறார்”** என்று எழுதியிருப்பதிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது.

சேகுவாராவின் தனி மனித வாழ்க்கை முறையைப் பார்த்தால் கூட, இளம் வயதில் அவர் சாதாரண சராசரி மனிதர்களைப் போல இருக்கவில்லை. சியாரா மீஸ்ட்ராவில் காடுகளில் பதுங்கியிருந்த போதும், விவசாயிகள் மத்தியில் கிராமங்களில் அவர் இருந்தபோதும், போராளிகளாக இருந்த அவரது நண்பர்கள், சூழ்நிலைகள் காரணமாக காம வேட்கை நிறைந்தவர்களாக மாறி, சில கிராமப் பெண்களுடன் உறவு கொண்டதாக அறிந்த சேகுவாரா அவர்களையெல்லாம் கடுமையாகக் கண்டித்திருக்கிறார். அது இரண்டு ஆண் பெண்களுக்கு நடுவிலே எழும் உறவு முறை சம்பந்தப்பட்டதல்ல, அவர்கள் புரட்சிக்காரர்களாகத் தான் கிராமங்களுக்குள் சென்றார்கள். அப்படியேதான் செயல்பட்டிருக்க வேண்டும். அதற்கு மாறாக அவர்கள் செயல்பட்டால், அது புரட்சியை பாதிக்கும் என்று கூறியிருக்கிறார்.

புரட்சிக்காரனான சேகுவாரா தன் குழந்தைகளுக்கு தன் மறைவுக்கு முன் எழுதிய மடலை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**“என் பிள்ளைக்கனி அமுதங்களாம்,**

**பிரியத்திற்குரிய ஹில்டிடா, அலெய்டா, காமிலோ, செலியா, ஏர்னஸ்டோ ஆகியோருக்கு.**

**இந்தக் கடிதத்தை நீங்கள் எப்போதாவது படிக்கிறபோது நான் உங்களுடன், இல்லை என்பது தெரிந்து விடும்.**

**என்னை நீங்கள் அதிகம் நினைத்திருக்க மாட்டீர்கள். சின்னஞ்சிறார்களுக்கோ என்னைப் பற்றி நினைத்துப் பார்க்க எதுவும் இருக்காது.**

**உங்கள் தந்தை தன் கருத்துக்களுக்கு ஏற்பச் செயலாற்றியவன். அவன் தன் நம்பிக்கைக்கேற்ப வாழ்ந்தவன்.**

**நீங்கள் நல்ல புரட்சிக்காரர்களாக வளர வேண்டும். நன்றாகப் படியுங்கள். இயற்கையைக் கட்டுப்படுத்த தொழில் நுட்பத்தை தன் வயப்படுத்திக் கொள்ளுங்கள். புரட்சிதான் மிக முக்கியமானது என்பதை நினைவில் கொள்க. நாம் ஒவ்வொருவரும் அதில் தனித் தனியாக ஒரு துளிதான்.**

**இந்த உலகத்தில் எங்கு அநியாயம் இழைக்கப்பட்டாலும், அதுகுறித்து பிரதிபலிப்பைக் காட்ட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். அதுதான் ஒரு புரட்சிக்காரனின் பாராட்டத்தக்க தன்மையாகும்.**

**விடைபெறுகிறேன், குழந்தைகளே.... உங்களை மீண்டும் பார்ப்பேன் என நம்புகிறேன்.**

**உங்கள் அப்பா அரவணைத்து, ஒரு பெரும் முத்தத்துடன்.**

**அப்பா “சே”**

சேகுவாரா தன் புரட்சியை கியூபா நாட்டின் வெற்றியுடன் முடித்துக் கொள்ளவில்லை. பக்கத்திலே உள்ள பொலிவியா நாட்டிலும் புரட்சி விதையை ஊன்றிட விரும்பிச் சென்றான். **“கியூபா புரட்சியில் எனக்கு அளிக்கப்பட்டிருந்த கடமைகளை நிறைவேற்றி விட்டேன் என நினைக்கிறேன். நான் உங்களிடமிருந்தும், தோழர்களிடமிருந்தும் என்னுடையவர்களாகி விட்ட மக்களிடமிருந்தும் விடைபெறுகிறேன்”** என்று பிடல் காஸ்ட்ரோவிற்கு மடல் வரைந்து விட்டு பொலிவியப் புரட்சியிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

பொலிவியா நாட்டின் புரட்சியின் வெற்றிக்காக முழு முனைப்புடன் பாடுபடும் சேகுவாராவின் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க ஏகாதிபத்தியம் முயற்சித்தது. சேகுவாராவைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 4200 டாலர்கள் சன்மானம் அளிக்கப்படும் என்று விலை நிர்ணயிக்கப்பட்டது. ஒரு நாள், சேகுவாரா, உலகத்திலிருந்து காணாமல் அடிக்கப்பட்டார் என்று செய்தி வருகிறது. அவர் இருக்கிறாரா? இல்லையா? என்ற கேள்விகள் எல்லாம் எழுப்பப்படுகின்றன. உண்மை உலகத்திற்குச் சரியாக அறிவிக்கப்படவில்லை. ஆனால் அமெரிக்க ஆவணங்களில் பின்னர் வெளிவந்த தகவல்களின்படி, அவர் கொல்லப்பட்டார் என்பதுதான் செய்தி. அந்த மரணத்தின் முனையிலே கூட, சேகுவாரா தன்னை சுடுவதற்காக வந்த ராணுவ தளபதியிடம் **“நீ எதற்கு வந்திருக்கிறாய் என்று தெரியும். நான் தயார். ஒரு மனிதனைத் தானே கொல்லப் போகிறாய். கோழையே சுடு”** என்றாராம். அவனும் சுட்டான். சேகுவாரா சுவரில் சாய்ந்து விழுந்தார். ஆனால், சாயாமல் நிமிர்ந்து நிற்கிறார் இன்றளவும் நம் நெஞ்சங்களில்!

**அன்புள்ள**
**மு.க.**

(முரசொலி - 15.11.2007)

---

### திருப்பூரில் கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள

# தீரன் சின்னமலை மகளிர் கலை - அறிவியல் கல்லூரி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ.30-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து, தீரன் சின்னமலை சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) காணொ லிக் காட்சி வாயிலாக திருப்பூர் மாவட்டம், வஞ்சி பாளையம், அவிநாசிமங்கலம் சாலையில் கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை திறந்து வைத்து, புதிதாக கட்டப்படவுள்ள தீரன் சின்னமலை சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு அடிக்கல் நாட்டினார்.

**தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் 15 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன், தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் பி.காம், பி.காம் (CA), பி.பி.ஏ., பி.எஸ்.சி. கணினி அறிவியல் (செயற்கை நுண்ணறிவு), பி.எஸ்.சி. (ஆடை வடிவமைப்பு மற்றும் ஃபேஷன்) ஆகிய பட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்படும். மேலும், இக்கல்லூரி, கணினி ஆய்வகம், ஆடை வடிவமைப்பு ஆய்வகம், கருத்தரங்குக் கூடம், ஸ்மார்ட் கிளாஸ் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டமைப்பட்டுள்ளது.

**தீரன் சின்னமலை சி.பி.எஸ்.இ. பள்ளி**

தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் 35,000 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் தீரன் சின்னமலை சி.பி.எஸ்.இ. பள்ளி கட்டப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக உயர்கல்வித் துறை அமைச்சர் முனை வர் க. பொன்முடி மற்றும் உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் ஏ.கார்த்திக், ஆகியோரும், திருப்பூர் மாவட்டத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் கே. சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்

க. செல்வராஜ், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தா. கிறிஸ்துராஜ், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ் குமார், துணை மேயர் ஆர். பாலசுப்பிரமணியம், திருப்பூர் மாநகராட்சி ஆணையர் பவன்குமார் ஜி. கிரியப்பனவர், கொங்கு வேளாளர் அறக்கட்டளையின் தலைவர் பெஸ்ட் எஸ்.ராமசாமி, அறக்கட்டளையின் நிர் வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# இந்து சமய அறநிலையத்துறை செயல்பாடுகள் சீராய்வுக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, நவ. 29-*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று முன்தினம் (28.11.2023) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள், சட்டமன்ற அறிவிப்பு களின் பணி முன்னேற்றம் குறித்த 28 - வது மாதாந்திர சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், 2021 - 2022 முதல் 2023 - 2024 வரையிலான நிதியாண்டுகளில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்தும், குறிப்பாக 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான திருக்கோயில் திருப்பணிகள், கிராமப்புற மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிகள், புதிய இராஜ கோபுரங்கள் கட்டும் பணிகள், ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் (Master Plan) கீழ் 15 திருக்கோயில்களில் நடைபெற்று வரும் திருப்பணிகள், திருக்குளங்கள் மற்றும் நந்தவனங்களை சீரமைத்தல், ரூ.1 கோடி மதிப்பீட்டிற்கு மேல் நடைபெற்று வரும் திருப்பணிகளின் பணி முன்னேற்றம் குறித்தும், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் பணிகள் குறித்தும் விரிவாக ஆய்வு செய்தார்.*

*அதனைத் தொடர்ந்து, திருக்கோயில்களுக்கு புதிய மரத்தேர்கள், தங்கத்தேர்கள் மற்றும் வெள்ளித்தேர்கள் உருவாக்கும் பணிகள், மரத்தேர் மராமத்துப் பணிகள், திருத்தேர் பாதுகாப்பு கொட்டகைகள் அமைத்தல், திருக்கோயில்களில் அமைந்துள்ள பசுமடங்களை மேம்படுத்துதல், உலோகத் திருமேனி பாதுகாப்பு அறைகள் கட்டுதல், யானை மணி மண்டபம், அன்னதானக் கூடம், வணிக வளாகம், திருமண மண்டபம், அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்புகள், மருத்துவ மையம், கம்பிவட ஊர்தி மற்றும் மின்தூக்கி அமைத்தல் போன்ற பணிகளில் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.*

*மேலும், அன்னதானத் திட்ட விரிவாக்கம், நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டம் விரிவாக்கம், புதிய மருத்துவ மையம் அமைத்தல், இராமேஸ்வரம், காசி ஆன்மிகப் பயணத்திற்கான முன்னேற்பாடு பணிகள், திருக்கோயில் அலுவலர்கள் மற்றும் பணி பணியாளர்களின் நலன் சார்ந்த திட்டங்கள், ஆன்மிக கலாச்சார மையம், திருவள்ளுவர் திருக்கோயில் மேம்பாட்டு பணிகள், திருக்கோயில்களில் வழங்கப்படும் அன்னதானம் மற்றும் பிரசாதத்தின் தரத்தினை உறுதி செய்திட அமைக்கப்பட்ட உணவு பாதுகாப்பு அலுவலர்களின் பணி முன்னேற்றம், திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஆகியவை குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்ட இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பணிகளை குறித்த காலத்திற்குள் விரைந்து முடிக்கவும், டிசம்பர் 23ந் தேதி வருகின்ற வைகுண்ட ஏகாதசியை சிறப்பாக கொண்டாடிடும் வகையில் தேவையான முன்னேற் பாடு பணிகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.*

*முன்னதாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், திருச்சி மாவட்டம், திருவானைக்காவல், ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயில் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பணிபுரிந்து பணி காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 4 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளையும், திருப்பூர் மாவட்டம், அய்யம்பாளையம், வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில் மற்றும் திண்டுக்கல், காளகத்தீஸ்வரர் திருக்கோயில்களுக்கு ஓதுவார் பணியிடத்திற்கு நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.*

*இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, தலைமைப் பொறியாளர் சி.இசையரசன், தனி அலுவலர்கள் (ஆலய நிலங்கள்) திருமதி கோ.விஜயா, த.குமரேசன், திருமதி சு.ஜானகி, இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.*



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் சேக்கிழார் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் 3008 பயனாளிகளுக்கு ரூ.56 கோடியே 45 இலட்சம் மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்களை கழகப் பொருளாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு மற்றும் குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, கு.செல்வபெருந்தகை, ஒன்றிய குழு தலைவர்கள் எஸ்.டி.கருணாநிதி, சரஸ்வதி மனோகரன், நகரச் செயலாளர்கள் கோ.சத்தியமூர்த்தி, பட்டூர் எஸ்.ஜபருல்லா, ஒன்றியச் செயலாளர்கள் ஏ.வந்தேமாதரம், ந.கோபால், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் ”மனித நேய உதய நாளாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு நேற்று [29.11.2023] சென்னை ஏழு கிணறில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற விழாவில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி 346 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தையற் தொகையுடன் கூடிய சீருடை மற்றும் 6 நபர்களுக்கு ஆட்டோவிற்கான சாவிகளை வழங்கினார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, கழக இளைஞரணி துணைச் செயலாளர் திரு.எஸ்.ஜோயல், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்டி. லோகேஷ், துணை அமைப்பாளர் பா.ஜெகதீஸ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவ - மாணவியருக்காக

# ரூ.12.54 கோடியில் கட்டப்பட்ட 5 விடுதிக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ.30-

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவ, மாணவியருக்காக ரூ.12.54 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 5 விடுதிக் கட்டடங்கள் மற்றும் ரூ. 6.52 கோடி செலவில் 2 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் நிறைவுற்ற உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் 12 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான 5 விடுதிக் கட்டடங்களையும் மற்றும் 2 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 6 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு பணிகள் நிறைவுற்ற பள்ளிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

மக்கள் தொகையில் பெரும் பகுதியினரான பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை உயர்த்துவதை சிறப்பு நோக்கமாகக் கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1969ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தையும், 1989ஆம் ஆண்டு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்தையும் ஏற்படுத்தினார். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தி, அம் மாணவ, மாணவியர் இடைநிற்றல் இன்றி கல்வி கற்றிட கல்வி உதவித் தொகை வழங்குதல், புதிய பள்ளி மற்றும் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இதனால் சமூகநீதி கொள்கைகளை நிறுவுவதிலும், அதனை செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு நாட்டிற்கே முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

நாமக்கல் மாவட்டம், குமாரப்பாளையத்தில் 100 மாணவர் தங்கும் வசதியுடன், 2 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்; பெரம்பலூர் மாவட்டம், வேப்பூரில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன்,

2 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம்; புதுக்கோட்டை மாவட்டம், மருதன்கோன்விடுதியில் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன், 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்; திருவாரூர் மாவட்டம், நன்னிலத்தில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன், 3 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத் தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம்; தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன், 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம்; என மொத்தம் 12 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 விடுதிக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் நிறைவுற்ற உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

மதுரை மாவட்டம் கோவிலாங்குளம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் - தெப்பத்துப்பட்டி ஆகிய இடங்க ளாளிலுள்ள 2 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்ட்) நிதி உதவியுடன் 6 கோடியே 51 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் அறிவியல் ஆய்வகங்கள், கூடுதல் கழிப்பறைகள், ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் ஆகிய நிறைவுற்ற உட்கட்டமைப்புப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அணில் மேஷ்ராம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# சைதை அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, நவ. 30-

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையிலும் ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., எம்.கிருஷ்ணமூர்த்திஎம்.சி, இரா.துரைராஜ் எம்.சி., சைதை மா.அன்பரசன். வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., முன்னிலையில் 27.11.2023 முதல் 01.12.2023 வரை சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு (நாளை) தங்க மோதிரத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்.

கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையிலும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும், விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும் பத்தாவது மண்டல குழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டல குழு தலைவருமான இரா. துரைராஜ், பொதுகுழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., ஆகியோர் முன்னிலையிலும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.விநாயகமூர்த்தி, கோட்டூர்பிரகாஷ், சங்கர்கணேஷ், ஜெ.இ.பாண்டியன், கா.வி. தியாகராஜன், செ.ரவி, சைதை மேற்கு பகுதி துணை அமைப்பாளர்கள் ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, இரா.வெங்கடேசன், ஜிம்.க.பிரபு ஆகியோர் வரவேற்பில் 27.11.2023 உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் அன்று முதல் 01.12.2023 (வெள்ளிக்கிழமை) வரை சைதாப்பேட்டை மாநகராட்சி மகப்பேறு நல மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை நாளை (1.12.2023) காலை 11 மணியளவில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்.

மேலும் இந்நிகழ்வில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணைமேயர் மு.மகேஷ்குமார் எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ., காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., கழக நிர்வாகிகள் க.தனசேகரன் எம்.சி., பாலவாக்கம் க.சோமு, காசி முத்து மாணிக்கம், வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., எஸ். குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், வாசு கிபாண்டியன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., பகுதி கழக செயலாளர்கள்ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி., மு.ராசா எம்.சி., எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி., வி.இ.மதியழகன் எம்.சி., சு. சேகர், துரைகபிலன், நொளம்பூர்வே.ராஜன், கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன், அய்யப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், தா.மோகன்குமார் எம்.சி., மாவட்ட அமைப்பாளர்கள் சைதைசாதிக், வழக்கறிஞர்த. பாபு, நா.மணிகண்டன், எம். எஸ்.அரிபாபு, அஞ்சல்என். ராமன், கோ.பாஸ்கர், பா. அருண்குமார், கழக த.ரமேஷ், சி.பரிமேலழகர், சி.சுரேஷ், டாக்டர் அனீஸ்நாகராஜ், வி.ராஜேஷ்,

பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகவுதமன், வி.பி.ஜானகிராமன், வட்ட கழக செயலாளர்கள் எஸ்.பி.கோதண்டம், எம். நாகா, சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோகமலநாதன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ் வேந்தன், டி.என்.சிவமணி, கிண்டிஆர்.எல்.செல்வம், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்.ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார்ரவி, ஜி.பாபு, அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம். எஸ்.மணி, ஏ.எஸ்.பழனி, எல். கார்த்திக், வே.புருஷோத்தமன், தீ.ராஜ்குமார், பி.நரேஷ்குமார், கு.கார்த்திகேயன், என்.சம்பந்தம், கே.தாஸ், கே.பிரபு, பிரஸ் கார்த்திக், என்.தீனதயாளன், டி.எஸ்.இரவிச்சந்திரன், எஸ். ரவீந்திரகுமார், ஆர்ட்ஸ்குமார், எம்.மாறன், ஜி.வெங்கடேசன், இ.செல்வி, பி.செல்வராணி, எம்.ஜி.மதிவாணன் ஆகியோர் கலந்துகொண்டு இந்நிகழ்வினை சிறப்பிக்க உள்ளனர்.



எழும்பூர் தொகுதி, 61வது வார்டு, கெங்கு ரெட்டி சாலையில் பழுதடைந்த கட்டிடத்தில் செயல்பட்டு வந்த டி.யு.சி.எஸ். ரேஷன் கடையை, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், குடும்ப அட்டைதாரர்களின் பாதுகாப்பு கருதி, 61வது வார்டு, சந்தோஷ் நகர் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு வளாகத்தில் ரேஷன் கடைக்காகக் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு இடம் மாற்றிட நடவடிக்கை மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து அந்த ரேஷன் கடை அக்கட்டிடத்திற்கு இடம் மாற்றப்பட்டதையடுத்து, அந்நியாய விலைக் கடையைப் பொதுமக்களின் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தார்.

### முதலமைச்சரிடம் ஆலோசித்து - விரைவில்

# கூட்டுறவு வங்கிகள் மூலம் கல்விக் கடன்!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தகவல்!



சென்னை,நவ.30-

சென்னை, கீழ்ப்பாக்கம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில் நேற்று (28.11.2023) கூட்டுறவு த்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் மண்டல இணைப்பதிவாளகள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தவாவது :

கூட்டுறவுத்துறையின் சார்பில் இன்றைய தினம் மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர்கள் ஆய்வுக்கூட்டம் நடைபெற்று வருகிறது. கூட்டுறவுத்துறையின் மூலம் இத்தகைய ஆய்வுக்கூட்டங்கள் செயலாளர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மற்றும் துரை அமைச்சர் என்ற முறையில் என் மூலமாகவும் அடிக்கடி நடத்தப்பட்டு வருகிறது. அந்த ஆய்வுகள் அடிப்படையில் பார்த்தால் கூட்டுறவுத்துறையின் வளர்ச்சி எதிர்பார்ததைவிட கூடுதலான பணி முன்னேற்றத்தை காண முடிகிறது.

**முதலமைச்சர் வழிகாட்டுதல்!**

இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால் அனைத்து துறைகளும் சிறப்பாக முன்னேற்றம் அடையவேண்டும். அனைத்துதுறைகளின் ஒட்டு மொத்த முன்னேற்றத்தின் அடிப்படையில் நம்முடைய மாநிலம் முன்னோடி மாநிலமாக வரவேண்டும் என்று

“இந்தியாவின் முதன்மையான முதலமைச்சர் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் அழைக்கப்படுவதை விட, பெருமைப்படுத்தப்படுவதை விட தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக முன்னேறி இருக்கின்றது என்ற செய்தி வரவேண்டும் என்று அதற்கான நான் உழைக்கின்றேன்” என்று முதலமைச்சர் குறிப்பிட்டுச் சொன்னதைப் போல, அனைத்து துறை வளர்ச்சியிலும் எங்களுக்கு வழிக்காட்டுதல்களைத் தந்து முதலமைச்சர் கவனம் செலுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையிலே கூட்டுறவு த்துறையினை செயல்படுத்தி வருகிறோம்.

கூட்டுறவுத்துறையைப் பொறுத்த வரையில் ஏராளமான மக்களுக்கு சேவை செய்கின்ற துறை என்றால் அது மிகையாகாது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 2 கோடியே 25 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற குடிமைப் பொருட்களை மாதந் தோறும் கொண்டு சேர்க்கும் பணியை தொடர்ந்து தொய்வின்றி செய்து கொண்டிருக்கிறது. இப்பணிக்காக 35,000க்கும் மேற்பட்ட நியாய விலைக்கடைகள் இயங்கி வருகின்றது.

**சிறப்பான வங்கிச் சேவை!**

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்படுகின்ற சிறப்புத்திட்டங்கள், குறிப்பாக கொரோனா காலகட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டு கட்டங்களாக தலா ரூ.2000 என ரூ.4000ஐ, 21 தொகுப்புகள் கொண்ட மளிகைப் பொருட்களையும் இந்த துறையின் மூலம் மக்களிடத்தில் கொண்டுபோய் சேர்த்தோம். அது மட்டும் அல்லாது முதலமைச்சர் அவர்களால் ஆண்டுதோறும் அறிவிக்கப்படுகின்ற பொங்கள் தொகுப்புகளையும் மக்களிடத்தில் கொண்டுபோய் சேர்த்தோம். கிராமப்புறங்களில் வாழும் மக்களின் மேம்பாட்டிற்கான இத்துறையின் மூலம் சிறப்பான வங்கி சேவையும் வழங்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடன்களை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருகிறது. 20062011 காலகட்டத்திலே முத்தமிழறிஞர் கலைஞர் பயிர்க்கடனை உரிய கெடு தேதிக்குள் திரும்பச் செலுத்தினால் அதற்கான வட்டித் தொகையினை செலுத்த தேவையில்லை என அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு தொடர்ந்து இன்றுவரை செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் மூலம் பயிர்செய்கின்ற காலங்களில் விவசாயிகள் கடன் தொல்லைகளில் மாட்டிக்கொள்ளாமல் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள்.

நலிந்த பிரிவினரான கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், மாற்றுத்திறனாள், சிறுதொழில் செய்பவர்கள், நடைபாதை வியாபாரிகள் ஆகியோருக்கும் இத்துறையின் மூலம் கடன்களை வழங்கிக்கொண்டிருக்கின்றோம். மேலும். விவசாயிகளுக்கு கால்நடை வாங்குவதற்கும், கால்நடைகளை பாரமரிப்பதற்கும் உரிய நேரத்தில் கடன்களை செலுத்தும் பட்சத்தில் வட்டியில்லா கடனும் வழங்கப்படுகிறது. இதன் மூலம் அனைத்து தரப்பு மக்களுக்கும் அவர்களது நிதிச் சுமையினை சீராக வைப்பதற்கு இத்துறை செயல்பட்டு வருகிறது.

**கடன் வழங்கல் அதிகரிப்பு!**

கடந்த 10 ஆண்டு ஆட்சி காலத்தில் ஆண்டு சராசரியாக ரூ.6.064 கோடி மட்டுமே பயிர்க் கடன் வழங்கப்பட்டது. ஆனால், அண்ணன் தளபதி முதலமைச்சராக பெறுபேற்ற பின்னர், கூட்டுறவுச் சங்கங்களின் வரலாற்றில் முதல் முறையாக 202122 ஆம் ஆண்டில் பயிர்க் கடன் அளவு ரூ.10,000 கோடியை தாண்டி வழங்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து சென்ற ஆண்டு ரூ.12,000 கோடி பயிர் கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்தார்கள். அந்த இலக்கையும் தாண்டி ரூ.13,400 கோடி என்ற அளவில் பயிர்கடன் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ.16,500 கோடி பயிர் கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் மூலம் அந்த இலக்கினையும் நாங்கள் எட்டிவிடுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. கடந்த காலங்களை விட இந்த இரண்டரை ஆண்டு கால ஆட்சியிலே அனைத்து வகையான கடன்களும் இரண்டு மடங்கு அதிகமாகவே வழங்கி சாதனை படைத்துள்ளோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

**ஊழியர்களின் அர்ப்பணிப்பு உணர்வு!**

அதேபோல, தேசிய மயமாக்கப்பட்ட வங்கி, தனியார் வங்கி, பன்னாட்டு வங்கி என போட்டிகள் நிறைந்த இந்த வங்கி சேவையில் கூட்டுறவு வங்கியின் சேவைகளும் மக்களை வெகுவாக கவர்ந்துள்ளதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். வங்கிச்சேவையின் மூலம் வரவு செலவு இத்துறைக்கு ரூ.1,04,000 கோடி என்ற அளவிற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டை விட ரூ.30,000 கோடி அதிகமாகும். இதனையும் நாங்கள் சாதித்துக் காட்டுவோம். வங்கிச்சேவையில் நவீன பல யுத்திகளை நாங்கள் செய்து வருகிறோம். அவைகள் இன்னும் ஒரிரு மாதங்களில் அதன் பலன்கள் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சென்றடையும். காலத்திற்கு ஏற்ப புதுப்பித்துக்கொள்ளும் துறையாக மட்டும் இல்லாமல், முதலமைச்சர் அறிவிக்கின்ற சிறப்புத்திட்டங்களை செயல்படுத்துவதிலும் உயர் அலுவலர்கள் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை அர்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு வருகிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற அறிவிப்புகளைப் பொறுத்தவரையில் சென்ற நிதிநிலை அறிக்கையின் போது, முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலின் படி அறிவிக்கப்பட்ட 44 அறிவிப்புகளில் 40 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. எஞ்சிய 4 அறிவிப்புகளுக்கும் இன்னும் ஒரு மாதத்திற்குள் செயலாக்கத்திற்கு வரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது கூட இந்தியாவிலேயே கூட்டுறவுச் சங்கங்களின் கிடங்குளை கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்திடம் (WDRA) பதிவு செய்தலில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது. அதற்கான கோடயங்களை ஒன்றிய அரசின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இது இத்துறையின் செயல்பாடுகளுக்கு கிடைத்த சான்றாகும்.

**சட்டத்திட்டங்களுக்குட்பட்டு பணியிடங்கள் நிரப்பல்!**

**கேள்வி:** கூட்டுறவு வங்கிகளில் விவசாயக் கடன்கள் வழங்குவதைப் போல கூட்டுறவு வங்கிகளில் கல்விக்கடன்கள் வழங்கப்படுமா?

**பதில் :** விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பா னவர்கள். அவர்களை காப்பாற்றும் நோக்கத்தில் தான் விவசாய கடன் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக 20012006 காலகட்டத்தில் கடன் சுமையினால் விவசாயிகள் தற்கொலை அதிகமாக இருந்தது. வறட்சியும் நிலவியது. விவசாயத்தைப் பொறுத்த வரையில் மழை அதிகமாக பெய்தும் பாதிப்பை ஏற்படுத்தும், பெய்யாமலும் பாதிப்பு ஏற்படுத்தும் ஆகவே விவசாயம் தொடர்ந்து நடைபெற வேண்டும் கடன் சுமைகளில் மாட்டிக்கொள்ளக் கூடாது என்பதை உண்ர்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அறிவித்தார்கள். நீங்கள் கூறியதைப் போல கல்விக் கடன் வழங்குவதும் நல்ல யோசனை தான். இது குறித்து முதலமைச்சர் அவர்களிடம் கலந்தாலோசித்து விரைவில் முடிவு எடுக்கப்படும்.

**கேள்வி :** கூட்டுறவு த்துறையில் தற்போது நேரடியாக இளநிலை உதவியாளர் பணியிடம் நிரப்பப்ப டுகிறது.

**பதில் :** துறையைப் பொறுத்த வரையில் நேரடி நியமனம், தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் நியமனம் என்பது தொடர்ந்து நடைமுறையில் உள்ள வழக்கமாகும். கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமில்லை எல்லா துறைகளி லும் வேலை வாய்ப்பினை வழங்க வேண்டும் என்பதில் முதலமைச்சர் உறுதியாக இருக்கிறார்கள். சமீபத்தில் கூட 33 பணியிடங்கள் TNPSC மூலம் நிரப்பப்பட்டது. நேரடி நியமனத்தில் கூட மாநிலம் முழுவதும் ஒரே நாளில் தேர்வு நடத்தி 85க்கு 15 என்ற மதிப்பெண்கள் அடிப்படையில் கூட்டுறவு சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பணியிடங்கள் நிரப்பப்படும்.

**கேள்வி :** இந்தாண்டு பொங்கல் தொகுப்பில் கரும்பு இந்த வருடம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுமா?

**பதில் :** இது குறித்து முதலமைச்சர் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். பின்னர் அறிவிப்பு வெளியிடப்படும்.

**கோ-பஜார் செயலி மக்களிடம் நல்வரவேற்பு!**

**கேள்வி :** கோபஜார் செயலி செயல்பாடுகள் எப்படி உள்ளது?

**பதில் :** கூட்டுறவுத்துறையின் மூலம் வெளியிடப்பட்ட இந்த செயலி மக்களிடத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இது போன்ற தனியார் செயலிகளுக்கு நிகராக இந்த செயலியினை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேபோல அதில் Delivery Charge பொருட்களின் விலையை விட அதிகமாக உள்ளதாக தகவல் வரப்பெற்றது. அதனை குறைக்கும் வகையில் இன்றைய ஆய்வுக்கூட்டத்தில் கூட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரிடு மாதங்களுக்குள் இந்த செயலி மிகுந்த அளவில் மேம்படுத்தப்பட்டு பயன்பட்டுக்கு வந்துவிடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின் போது, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர்.கே.கோபால்., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன். , சிறப்புபணி அலுவலர் (தமிழ்நாடு கூட்டுறவு வங்கி) எம்.பி.சிவன் அருள். (ஓய்வு) ஆகியோர் உடன் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (29.11.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் வடசென்னை வளர்ச்சித் திட்டம் குறித்தும், 2023–2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மற்றும் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் மற்றும் சாலைப் பணிகள் முன்னேற்றம் குறித்து காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்துத்துறை, மற்றும் வனத்துறையுடன் இணைந்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, , சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 2.92 கோடி ரூபாய் மதிப்பிலான 2 புதிய வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் 60 மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகள் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ள அச்சுற்றுலா பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளை வழியனுப்பி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், முதன்மைச் செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தலைவர்/ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. காகர்லா உஷா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் கமல் கிஷோர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) காணொலிக் காட்சி வாயிலாக திருப்பூர் மாவட்டம், வஞ்சிபாளையம், அவிநாசி – மங்கலம் சாலையில் கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை திறந்து வைத்து, புதிதாக கட்டப்படவுள்ள தீரன் சின்னமலை சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு அடிக்கல் நாட்டினார்.

## எட்டாக் கனியாக இருந்த கல்வி எல்லோருக்கும் கிடைக்க சமூக நீதி சீர்திருத்தத் தலைவர்கள்தான் காரணம்!

# தமிழ்நாட்டு மாணவர்கள் படித்து உலகெங்கும் சென்று சாதிக்க வேண்டும்!

## தீரன் சின்னமலை மகளிர் கலை - அறிவியல் கல்லூரியைத் திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ. 30 -**

**எட்டாக் கனியாக இருந்த கல்வி எல்லோருக்கும் கிடைக்க சமூக நீதி சீர்திருத்தத் தலைவர்கள்தான் காரணம் என்றும், தமிழ்நாட்டு மாணவ - மாணவிகள் நன்கு படித்து உலகெங்கும் சென்று சாதிக்க வேண்டும் என்பதே எனது கனவு, மகிழ்ச்சி எனவும் தீரன் சின்னமலை மகளிர் கலை - அறிவியல் கல்லூரியைத் திறந்து வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) காணொலிக் காட்சி வாயிலாக கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை திறந்து வைத்து, தீரன் சின்னமலை சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை வருமாறு:-

தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை திறந்து வைப்பதிலும், CBSE பள்ளிக்கு அடிக்கல் நாட்டி வைப்பதிலும் மகிழ்ச்சி அடைகிறேன்!

தீரன் சின்னமலையின் பெயரை சொன்னாலே, இப்போதும் உணர்ச்சியும் எழுச்சியும் ஏற்படும்!

'சென்னிமலைக்கும் சிவன் மலைக்கும் இடையில் ஒரு சின்னமலை' என்று சொல்லி இன்றைக்கும் வரலாற்றில் பெரும் மலையாக வாழுகிறவர்தான் தீரன் சின்னமலை.

**தீரன் சின்னமலையின் உயிர் தியாகம்!**

விடுதலை உணர்வுடன் போராடியதற்காக சிறை பிடிக்கப்பட்டு, தூக்கிலிடப்பட்டவர் தீரன் சின்னமலை!

அவரைப் போன்றவர்களின் உயிர்த் தியாகத்தால்தான் இந்திய நாடு விடுதலை பெற்றது.

அவருடைய பெயரை கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு வைப்பதற்கு முதலில் என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருப்பூர் அங்கேரிபாளையம் சாலையில், 1991ஆம் ஆண்டு, கொங்கு வேளாளர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி துவங்கப்பட்டு, இன்றைக்கு 3,135 மாணவ - மாணவியர் பயின்று வரும் மிகப்பெரிய பள்ளியாக உயர்ந்திருக்கிறது. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள குடும்பங் களைச் சேர்ந்த குழந்தைகள்தான் இங்கே அதிகம் படிக்கிறார்கள்.

**தீரன் சின்னமலை பெயரில் கல்லூரி!**

இதன் அடுத்தகட்டமாக, மகளிர் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. கல்லூரி கட்டியது போக மீதமிருக்கின்ற இடத்திலேயும் பள்ளி தொடங்க முடிவு செய்திருக்கிறீர்கள். கல்லூரியை தொடங்கி வைப்பது பள்ளிக்கு அடிக்கல் நாட்டுவது என்று, இரண்டு பணியையும் எனக்கு கொடுத்ததற்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.கொங்கு வேளாளர் அறக்கட்டளைத் தலைவர் பெஸ்ட் எஸ்.ராமசாமி அவர்களுக்கும், அறக்கட்டளையின் உறுப்பினர்கள் எல்லோருக்கும் என் பாராட்டுகள்! வாழ்த்துகள்! தீரன் சின்னமலை பெயரில் கல்லூரி அமைக்க 28 ஏக்கர் நிலம் வாங்கியும் அனுமதி கிடைக்காமல் இருந்தது. கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில், இதே மேற்கு மண்டலத்திலிருந்து 9 பேர் அமைச்சர்களாக இருந்தும் அனுமதி கிடைக்கவில்லை. கல்லூரி கட்டியதற்காக இந்த நிலத்தின் வகையை கூட மாற்றிக் கொடுக்கவில்லை.

**கல்லூரி கட்டுவதற்கான தடையை உடனடியாக நீக்கித் தந்தேன்!**

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் அருமை தோழர் சுப்பராயன் அவர்கள் தீரன் சின்னமலை கல்லூரி தொடர்பான அறக்கட்டளை நிர்வாகிகளை எல்லாம் அழைத்துக் கொண்டு வந்து இந்தக் கோரிக்கையை என்னிடத்தில் வைத்தார். நான் நேரடியாக கண்காணித்து, நில "வகை"யை மாற்றிக்கொடுத்து கல்லூரி கட்டுவதற்கு இருந்த முதல் தடையை நீக்கினேன். பிறகு, உயர்கல்வித் துறை அனுமதி, கட்ட அனுமதி எல்லாவற்றையும் வழங்க ஆணையிட்டு அதையும் நிறைவேற்றிக் கொடுத்தோம்.

இன்றைக்கு இந்தப் பகுதியில் இருக்கின்ற பெண்களுக்கான கல்லூரியாக இது மாறியிருக்கிறது. இதை நேரில் வந்து திறந்து வைக்கவேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டேன். ஆனால், என்னுடைய உடல்நிலை காரணமாக, நீண்ட தூர பயணத்தை தவிர்க்கவேண்டும் என்று மருத்துவர்கள் கண்டிப்பாக சொல்லிவிட்டதால், காணொலிக்காட்சி மூலமாக திறந்து வைத்திருக்கிறேன்.

**கழக ஆட்சியில்தான் கொங்கு பகுதிக்கு இரண்டு பெண்கள் கல்லூரி!**

நான் மட்டுமல்ல, முத்தமிழறிஞர் கலைஞரும் கொங்குப் பகுதி மக்களுக்காக நிறைய பாடுபட்டார். இதே மாதிரி, செயின்ட் ஜோசப் பெண்கள் கல்லூரிக்கு அருமை தோழர் சுப்பராயன் கோரிக்கைய ஏற்று அனுமதி கொடுத்தார். அப்போது இது ஒன்றுபட்ட கோவையாக இருந்தது. எனவே, தி.மு.க ஆட்சியில்தான் இந்தப் பகுதிக்கு இரண்டு பெண்கள் கல்லூரிகள் வந்திருக்கிறது என்று பெருமையாக சொல்லிக்கொள்கிறேன்

அதுமட்டுமில்லை, திருப்பூருக்கே ஆதாரமாக விளங்குகின்ற பனியன் தொழில் செழிக்க, உற்பத்தி வரியை தள்ளுபடி செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதுவும் "சட்டமன்ற உறுப்பினர் சுப்பராயன் கேட்டபடி ரத்து செய்யப்படுகிறது" என்று சட்டமன்றத்திலேயே கலைஞர் அறிவித்தார்.

கொங்கு வேளாளர் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக அறிவித்ததும் முத்தமிழறிஞர் கலைஞர்தான். இப்படி இந்தப் பகுதி வளரவும், இந்தப் பகுதி மக்கள் முன்னேறவும் பெண்களுடைய கல்வி முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டு வருவதுதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி.

இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான அருமை நண்பர் சுப்பராயன் அவர்களுக்கு இந்தத் தருணத்தில் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**பாட்டாளி வர்க்கத்துக்காக தொடர்ந்து போராடும் சுப்பராயன்!**

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் பாட்டாளி வர்க்கத்துக்காகவும் தன்னை ஒப்படைத்துக்கொண்டு, நெடுநாட்களாக போராடி வருகிறவர்தான் நம்முடைய அருமை தோழர் சுப்பராயன் அவர்கள்!

அதேபோல், ஒருங்கிணைப்பு செய்த செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர் திருப்பூர் செல்வராஜ் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி!

ஒரு காலத்தில் கல்வி என்பது எல்லாருக்கும் எளிதாக கிடைத்துவிடவில்லை.

எட்டாக்கனியாக இருந்த கல்வி, இன்றைக்கு எல்லாருக்கும் கிடைக்கிறது என்றால், அதற்குப் பின்னால் ஏராளமான போராட்டங்கள் இருக்கிறது!

**திரும்பிய பக்கம் எல்லாம் பள்ளியும், கல்லூரியும் உருவாக்கப்பட்டதால்தான், இன்றைக்கு வீடுகள்தோறும் பட்டதாரிகள் வலம் வருகிறார்கள்! இன்னொரு பக்கம், உங்களை மாதிரியான சமூக அமைப்புகளும், சேவை மனப்பான்மையோடு பள்ளி - கல்லூரிகளை தொடங்கினார்கள். அதனால்தான் கல்வி நீரோடை தடங்கல் இல்லாமல் நாடு முழுவதும் பாயுது!**

**இந்தக் கல்வி வாய்ப்பை எல்லாம் தமிழ்நாட்டு இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். முக்கியமாக பெண் பிள்ளைகள், கல்லூரிக் கல்வி - உயர்கல்விகள் என்று நிறைய படிக்கவேண்டும்!**

**கல்லூரி கல்வியாக விரிவு படுத்தியவர் கலைஞர்!**

நீதிக்கட்சிக் காலத்திலிருந்து சமூகநீதியை வலியுறுத்தி வருகின்ற சமூக சீர்திருத்தத் தலைவர்களால்தான் இந்த மாற்றம் சாத்தியமாச்சு!

பெருந்தலைவர் காமராசர் பள்ளிக் கல்வியை ஊக்கப்படுத்தினார்!

அதை கல்லூரிக் கல்வியாக முத்தமிழறிஞர் கலைஞர் விரிவுபடுத்தினார்!

திரும்பிய பக்கம் எல்லாம் பள்ளியும், கல்லூரியும் உருவாக்கப்பட்டதால்தான், இன்றைக்கு வீடுகள்தோறும் பட்டதாரிகள் வலம் வருகிறார்கள்!

**பெண்கள் உயர்கல்வி கற்க வேண்டும்!**

இன்னொரு பக்கம், உங்களை மாதிரியான சமூக அமைப்புகளும், சேவை மனப்பான்மையோடு பள்ளி - கல்லூரிகளை தொடங்கினார்கள். அதனால்தான் கல்வி நீரோடை தடங்கல் இல்லாமல் நாடு முழுவதும் பாயுது!

இந்தக் கல்வி வாய்ப்பை எல்லாம் தமிழ்நாட்டு இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். முக்கியமாக பெண் பிள்ளைகள், கல்லூரிக் கல்வி – உயர்கல்விகள் என்று நிறைய படிக்கவேண்டும்!

பெண் கல்வியை ஊக்குவிப்பதற்குதான் அரசு பள்ளியில் படித்துவிட்டு, கல்லூரிக்கு வர மாணவி களுக்கு நம்முடையதிராவிடமாடல்ஆட்சியில்மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் தருகிறோம்!

பெண்களுக்கு விடியல் பயணம் என்று கட்டணமில்லா பேருந்து வசதி செய்து கொடுத்திருக்கிறோம்!

என்னுடைய கனவெல்லாம், தமிழ்நாட்டு மாணவர்களும் - மாணவிகளும் உலகம் எல்லாம் சென்று சாதிக்க வேண்டும்! நீங்கள் சாதிப்பதை பார்த்து நான் மகிழ்ச்சி அடையவேண்டும்!

பெண்களை வீட்டுக்குள் முடக்குகின்ற பழைய காலம் எல்லாம் மலையேறி சென்றுவிட்டது! பெண்கள் உலகை ஆளுகின்ற காலம் வந்துவிட்டது!

வாங்க... உலகம் உங்களுக்காக காத்திருக்கிறது!

படித்து முன்னேறி வாங்க... வரலாற்றில் உங்களுக்கான இடம் காத்திருக்கிறது!

இதற்கெல்லாம், அரசு மாதிரியே சமூகநல அமைப்புகளும், கல்வி மருத்துவம் போன்றவற்றில் சேவையாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முடிந்தவரைக்கும் இலவசமாக... இல்லையென்றால், குறைந்த கட்டணத்தில் அந்த சேவையை வழங்கவேண்டும்!

அதுமாதிரியான சேவையில் ஈடுபடுகின்ற கொங்கு வேளாளர் அறக்கட்டளை மேலும் மேலும் வளர வேண்டும் என்று நான் மனதார வாழ்த்துகிறேன்.

தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிக்கின்ற மாணவிகள் எதிர்காலத்தில் மிகச் சிறந்தவர்களாக எல்லா உயர்வையும் அடைய என்னுடைய வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர் - இராயபுரம் முன்னாள் பகுதிச் செயலாளர்

## வே.குமரேசன் 17ஆம் ஆண்டு நினைவு நாள் - நல உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா வழங்கினார்! நிகழ்ச்சி ஏற்பாடு: கு.ரமேஷ்!

சென்னை, நவ. 30 -

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் பகுதிக் கழகச் செயலாளரும் தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினருமான வே.குமரேசன் 17ஆம் ஆண்டு நினைவு நாள் மலரஞ்சலி நிகழ்ச்சி 24.11.2023 - வெள்ளிக்கிழமையன்று காலை 11.00 மணியளவில் எண்.10-1 தெலுங்கு செட்டித் தெரு, பழைய வண்ணாரப் பேட்டையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.இளைய அருணா தலைமை வகித்து நலத்திட்ட உதவிகளை வழங்கி வே.குமரேசன் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்.

வ.பெ.சுரேஷ், இரா. செந்தில்குமார், எம்.கே. இஸ்மாயில், சு.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், த. ஜெயபால், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ. மோகன், வி.விஜயலட்சுமி எம்.சி., எஸ்.ரமேஷ், இரா. பொன்முடி, எஸ்.யுவராஜ், ந.குமார், சுவீஸ் ஆர்.இளையராஜா, ஜி.உமாபதி, கோ.நித்தி யானந்தம், ந. மணிமாறன் மற்றும் பலர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மு.கோபி, நா.சண்முகம், கி.ராஜேந்திரன், எல்.அருளரசன், வே.சிவகுமார், க. கோவிந்தசாமி, டாக்டர் சி.இளங்கோ, அன்பு வி. தாமஸ், நா.கஜேந்திரன், சுவிஸ் கே.ராஜன், ரெயின்போ என்.விஜயகுமார் உள்ளிட்ட பலர் முன்னிலை வகித்தனர்.

மேலும் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, மேயர் பிரியா ராஜன், ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இதில் இரா.மதிவாணன், இரா.நரேந்திரன், ந.மனோகரன், பி.டி.பாண்டிச்செல்வம், ஆர்.எம்.டி. ரவீந்திரன், இரா.கர்ணா, இரா.வெற்றிவீரன், க. நாகம்மை, இரா.இலட்சுமணன், எஸ். ஜெபதாஸ் பாண்டியன், பா.மதி வாணன், என். மருதுகணேஷ், நேதாஜி யு.கணேசன், டி.வி.முத்து கிருஷ்ணன், ஏ.டி.மணி, லியோ டி.சுரேஷ், ஏ. ரமேஷ்பாபு, லட்சுமி வேலு, லயன் எம்.தீனதயாளன், ஜெ.காணிக்கைநாதன், வெ.சு.சத்தியநாராயணன், எஸ்.எம்.பரசுராமன், கார்த்திக் செங்குட்டுவன், கோ.சதீஷ், சி.மணிகண்டன், ப.சோமசுந்தரம், லயோலா கே.மதன், ஆர். பொன்.இளவரசன், பா.வேளாங்கண்ணி எம்.சி., கீதா சுரேஷ் எம்.சி., நிரஞ்சனா ஜெகதீசன் எம்.சி., மற்றும் கழக மூத்த முன்னோடிகள், கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

48வது வட்டக் கழகச் செயலாளர் இரா.பாலன் நன்றி கூறினார்.

இராயபுரம் மேற்கு பகுதி துணைச் செயலாளர் கு.ரமேஷ் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்திருந்தார்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்ற தொகுதி டி.என்.பாளையம் ஒன்றியம், கணக்கம்பாளையம் ஊராட்சி, சின்ன காளியூர் பழைய காலனி பகுதியில் வசிக்கும் பார்வதிதேவியின் வீடு கனமழை காரணமாக இடிந்து விழுந்ததை அறிந்து அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் நேரில் சென்று ஆறுதல் கூறி நிவாரண தொகை வழங்கினர். மேலும் அந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் நாங்கள் வசித்து வரும் தொகுப்பு வீடுகள் சிதளம் அடைந்து காணப்படுகிறது எந்த நேரத்திலும் விழுந்து விடும் நிலைமையில் உள்ளது. தங்களுக்கு புதிய வீடுகள் கட்டிட தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை மனுக்களை வழங்கினர். அதுபோது டி.என்.பாளையம் ஒன்றிய கழக செயலாளர் எம்.சிவபாலன், ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன் , ஊராட்சி மன்ற துணைத் தலைவர் விஸ்வநாதன், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் திருமுருகன், சம்பத், குமரேசன், வேலுச்சாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை, தலைமைச் செயலகத்தில் 27.11.2023 அன்று நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவை, சீன நாட்டின் ஹாங்சோவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023ல் பெண்கள் பிரிவில் 4x400 மீட்டர் தொடர் ஓட்டப்பந்தயம், 4x400 மீட்டர் கலப்பு தொடர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப் பதக்கங்கள் வென்ற செல்வி சுபா வெங்கடேசன் மற்றும் பெண்கள் ஸ்குவாஷ் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற செல்வி ஜோஸ்னா சின்னப்பா ஆகிய மின்சார வாரிய அலுவலர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக முதுநிலை விளையாட்டு அலுவலர் சிவகுமார் உள்ளார்.



சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் 27.11.2023 அன்று பொது நூலகத்துறை, சென்னை மாநகர நூலக ஆணைக்குழு மற்றும் சமூக நீதிக் கண்காணிப்புக் குழு சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவில் சென்னை மாநகர நூலக ஆணைக் குழு தலைவர் கவிஞர் மனுஷ்ய புத்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் பொது நூலகத் துறை இயக்குநர் க. இளம்பகவத், சமூக நீதிக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் செயலர் த.ஆபிரகாம், எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன், கவிஞர் யுகபாரதி, சமூக நீதிக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஜெய்சன், பொது நூலகத் துறை துணை இயக்குநர் ச.இளங்கோ சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கழக இளைஞர் அணி செயலாளர், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

# உதயநிதி ஸ்டாலின் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை!

## மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் அறிக்கை!

*உதகை, நவ.30-*

நீலகிரி மாவட்ட திமுக இளைஞர் அணியின் செயல் வீரர்கள் கூட்டம் உதகை NCMS வளாகத்தில் எதிர் வரும் 2.12.2023 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற உள்ளது.



இதில் கலந்து சிறப்புரையாற்றிட திராவிட முன்னேற்ற கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் - விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 1.12.2023 அன்று மாலை நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தொடராக திகழ்ந்து கழகத்தையும், தமிழ்நாட்டையும் சிறப்புடன் வழிநடத்திவரும் கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் இளைஞர் அணி செயலாளராக இருந்து செயல்பட்டார்களோ, அதேபோல் திராவிட நாயகன் தமிழக முதல்வர் அவர்களுக்கு இளைஞர் அணி செயலாளர் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்று முதன் முதலாக நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளார் என்பது நம் அனைவருக்கும் மிகழ்ச்சியான செய்தியாக அமைந்துள்ளது.

அமைச்சராக பொறுப்பேற்றது முதல் அனைத்து தரப்பு மக்களும் பாராட்டி அளவிற்கு தனது துறைச் சார்ந்த பணிகளை சிறப்புடன் செய்து வருவதோடு, நாட்டிலுள்ள இளைஞர்களுக்கு ஓர் வழிகாட்டியாக திகழ்ந்து வருகிறார்கள். தற்போதைய அரசியல் சூழலில் நாடே எதிர்நோக்கும் இளந்தலைவராக இவரது செயல்பாடுகள் அமைந்துள்ளது நம் அனைவருக்கும் பெருமைக்குரியதாகும்.

நீலகிரி மாவட்டத்திற்கு 1.12.2023 வெள்ளிகிழமை வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வரவேற்க அனைவரும் தயாராவீர் என அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதன்படி, கோவை விமான நிலையத்திலிருந்து சரியாக 2 மணியளவில் உதகைக்கு புறப்படும் கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களுக்கு நீலகிரி மாவட்ட திமுக சார்பில் குன்னூர் லெவல் கிராசிங் பகுதியில் மாலை 4.30 மணியளவிலும், எல்லநள்ளி பகுதியில் 5 மணியளவிலும், உதகை சேரிங்கிராஸ் பகுதியில் மாலை 5.30 மணியளவிலும் உற்சாக வரவேற்பு வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எதிர்கால தமிழ்நாட்டை வழிநடத்தும் கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களுக்கு அளித்திடும் வரவேற்பு நிகழ்ச்சிகள் மிக எழுச்சியுடன் அமைந்திடும் வகையில், குன்னூர் லெவல் கிராசிங் பகுதியில் குன்னூர் நகரம், குன்னூர் ஒன்றியம், கோத்தகிரி, கீழ்கோத்தகிரி ஒன்றிய பகுதிகளை சார்ந்த கழக தோழர்களும், எல்லநள்ளி பகுதியில் மேலூர் ஒன்றியத்தை சார்ந்த கழக தோழர்களும், உதகை சேரிங்கிராஸ் பகுதியில் உதகை நகரம், உதகை வடக்கு, உதகை தெற்கு ஒன்றிய கழகங்களை சார்ந்த கழக தோழர்களும் கலந்துக்கொள்ள அனைவரையும் அன்புடன் வேண்டுவதோடு, வரவேற்பு நிகழ்ச்சிகள் அனைத்தும் மிக சிறப்புடன் அமைந்திட தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் தொடர்புடைய நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணியினர் அனைவரும் சிறப்புடன் செய்திட அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன். மேலும், 2ம் தேதி நடைபெறும் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் இளைஞர் அணியினர் அனைவரும் வெண் சீருடையில் கலந்துக் கொள்ள அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பா.முபாரக் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. விவசாய அணி

# மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம்!

## விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாவட்ட அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் 1.12.2023 வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணி அளவில், திருச்சி, கலைஞர் அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையிலும் விவசாய அணி மாநில நிர்வாகிகள் முன்னிலையிலும் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்-அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திருச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ந.தியாகராஜன், எம்.எல்.ஏ., திருச்சி மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் க.வைரமணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட, மாநகர் அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: டிசம்பர் - 17 சேலத்தில் நடைபெற உள்ள தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு மற்றும் விவசாய அணியின் ஒன்றிய நகர பகுதிக் கழக மற்றும் பேரூர் புதிய நிர்வாகிகள் நியமனம் தொடர்பாக.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் க.வினோத் தலைமையில்

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு - நாஞ்சில் சம்பத் - சே.மெ.மதிவதனி புகழுரை ஆற்றினர்!

*சென்னை, நவ. 30*

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் (27.11.2023 திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு, ஒய்.எம்.சி.ஏ. ட்வுட்டனில் நடைபெற்றது.

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க. வினோத் தலைமை வகித்தார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் வி.சுதாகர், சொ.வேலு, டி. லோகேஷ், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், கோ.மணி, புரசை ஜி.தாமோதரன், வே. உமாகாந்த், க.நந்தீஸ்வரன், அ.நிர்மலாதேவி, எல். சுந்தர்ராஜன், ஆர்.டி.சங்கர் நானா, சே.பாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

இப்பொதுக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, நாஞ்சில் சம்பத், சே.மெ.மதிவதனி ஆகியோர் புகழுரை ஆற்றினர்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, இ.பரந்தாமன், அ.வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, சரிதா மகேஷ்குமார், பரிதி இளம் சுருதி மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

58 வது வட்டக் கழகச் செயலாளர் வி.விஜயகுமார், 58 (அ) வட்டக் கழகச் செயலாளர் ஆர்.பாபு ஆகியோர் நன்றி கூறினர்.

### புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

### மாதவரத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா

# முதியோர் இல்லத்தில் அறுசுவை உணவு மற்றும் நலஉதவிகள்

## கே. கருணாகரன் தலைமையில்! சி. மூர்த்தி - எஸ்.பாலாஜி - கே. சண்முகபிரியன் - எஸ்.சிவக்குமார் முன்னிலை!


*சென்னை, நவ.30-*

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தொடர் நிகழ்ச்சியாக 17வது வட்டம் தீயம்பாக் கம் பகுதியில் அமைந்துள்ள டீ கப் மினிஸ்டரீஸ் முதியோர் காப்பகத்தில் அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டது.

முதியோர் இல்லத்தில் வசிக்கக்கூடிய அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. மேலும் முதியோர்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களும் வழங்கப்பட்டன. இவற்றை மாதவரம் வடக்குப் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிக்கு 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமை தாங்கினார். வட்டக் கழக நிர்வாகிகள் சி.மூர்த்தி, எஸ். பாலாஜி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணியின் துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன் முன்னிலையில்,

தீயம்பாக்கம் எஸ். சுதர்சன், எம். ஜான்சன்,பூபாலன், செட்டிமேடு டி.திவாகர், எஸ். விஜயன், கொசப்பபூர் தினகரன், வி.சுமிர், வடபெரும்பாக்கம் என். நாகராஜன், ஜி. முனிவேல், கமலநாதன், எம். மைக்கேல், பி. செந்தில், எம். என். தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

கண்ணீர் அஞ்சலி

ஒன்றுபட்ட திருவள்ளூர் மாவட்டத்திற்கு உட்பட்ட அம்பத்தூர் நகர வட்ட கழக செயலாளராகவும் நகர மன்ற உறுப்பினராகவும், மு.கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளராகவும் மாவட்ட பிரதிநிதி மற்றும் உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞராகவும் கழக பணியாற்றி நம்மை எல்லாம் மீளா துயரில் ஆழ்த்தி விட்டு நம்மை விட்டு மறைந்து இருக்கும்

**T.சம்பத்குமார்** M.A.,M.L.,
வயது-57

அவர்கள் **29.11.2023** காலை **6.00** மணியளவில் **இயற்கை எய்தினார்** என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம் அவரை பிரிந்து வாடும் குடும்பத்தினர்களுக்கும் உறவினர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் ஆழந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்

ஆழ்ந்த வருத்தத்துடன்:
மாதவரம். **எஸ்.சுதர்சனம்** M.A.,B.L., MLA
சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர்

சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க


### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# மதுரவாயல் 153வது வட்டக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் தி.சார்லஸ் அறிக்கை!

*சென்னை, நவ. 30-*

மதுரவாயல் தெற்கு பகுதி 153வது வட்ட கழக கூட்டம் இன்று (30.11.2023) வியாழக்கிழமை மாலை 6 மணி அளவில் போரூர் சரவணா ஸ்டோர் எதிரில் அமைந்துள்ள எஸ்.ஆர் மகாலில் அவைத்தலைவர் க.நடராஜன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் தெற்கு பகுதி கழகத்தின் செயலாளரும் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க. கணபதி கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார். அதுபோது பாக முகவர்கள், பூத் கமிட்டி குழு பணிகள், மாநில இளைஞர் அணி மாநாடு மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

ஆகவே இந்த கூட்டத்தில் வட்டக் கழகத்திற்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர் வட்டக் கழக நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதி கழக செயற்குழு உறுப்பினர்கள் மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் BLA2 பாக முகவர்கள் குழு (BLC) மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி வட்டச் செயலாளர் சி.சார்லஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.



சென்னை, கலைவாணர் அரங்கில், நேற்று (29.11.2023) பொதுப்பணித்துறையின் மூலம் கட்டப்படும் கட்டடங்களில், "உள்கட்டமைப்பில் நவீன தொழில்நுட்பம்" குறித்து கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி.சந்திரமோகன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர்கே.ஆயிரத்தரசு ராஜசேகர் மற்றும் மண்டலத் தலைமைப் பொறியாளகள் மற்றும் பொதுப்பணித்துறையின் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (29.11.2023) சென்னை தேனாம்பேட்டையில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில் மாவட்ட தாய்சேய் நல அலுவலர்கள் மற்றும் பகுதி சுகாதார செவிலியர்களுக்கான மடிக்கணினிகளை வழங்கினார். இந்நிகழ்வில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மரு.எழிலன் நாகநாதன், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் திரு.ம.கோவிந்தராவ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, குடும்பநலத்துறை இயக்குநர் மரு. ஹரிசுந்தரி உள்ளிட்ட உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிறந்த நிர்வாகம் – வெளிப்படைத் தன்மையை நிலைநாட்டிட

# மாநிலம் முழுவதும் பொதுப்பணித்துறை கணினிமயமாக்கப்பட்டுள்ளது!

## கருத்தரங்கில் அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

சென்னை, நவ.30-

பொதுப்பணித்துறையில் மூலம் கட்டப்படும் கட்டடங்களில், "உள்கட்டமைப்பின் நவீன தொழில்நுட்பம்" குறித்து கருத்தரங்கம், நேற்று (29.11.2023) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, இக்கருத்தரங்கை தொடங்கி வைத்தும், 'கட்டட மலர்' என்ற காலாண்டு முதல் இதழை வெளியிட்டும் உரையாற்றினார்.

அப்போது அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது :

மனித வரலாற்றில் சக்கரம் கண்டுபிடித்த நாள் ஒரு திருப்பு முனை, மனித உழைப்பை எளிதாக்கியது அந்தக் கண்டுபிடிப்புத்தான், பொறியியலின் தொடக்கமும் அதுதான், பொறியியல் என்பதே மனிதனின் இடர்பாடுகளைக் குறைப்பதுதானே, தொடக்கத்தில் பொறியியலில் இரண்டே பிரிவுகள் இருந்தன, ஒன்று போர்ப் பொறியியல், இன்னொன்று மக்களுக்கான பொறியியல்.

இரண்டாவது சொன்னதுதான், சிவில் இன்ஜினியரிங் - நீங்கள் படித்த பாடம், அந்த சிவில் இன்ஜினியரிங் இன்று நூற்றுக்கணக்கில் பிரிந்து மனிதனுக்குத் தொண்டாற்றி வருகிறது. மனிதன் வளரும் போது, தேவைகள் பெருகுகின்றன. தேவைகள் புதிய கண்டுபிடிப்புகளுக்கு வழிகாட்டுகின்றன. மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வது, பொதுப் பொறியியல்தான். உள்கட்டமைப்பு ஒரு நாட்டின் வலிமையை அடுத்தவர்களுக்கு உணர்த்துவது என்பதால், அது வலிமையாகவும் புதியதாகவும் இருக்க வேண்டும். மக்கள் பெருக்கம் ஒரு சவாலாக இருந்து வருகிறது. மக்கள் பெருக்கத்திற்கு ஈடுகொடுக்கும் விதத்தில் அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பது அவசியம். அதற்கு பொறியியல் மட்டுமே உதவும்.

**பழமையான துறை!**

பொதுப்பணித்துறை தமிழ்நாட்டின் பழமையான துறையாகும். இத்துறை 1858 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 165 ஆண்டு பழமையானது. பொதுப்பணித்துறையில் இருந்து தான், பல்வேறு துறைகள் பிரிந்தன. 1905ல் இரயில்வே துறை, 1934ல் மின்சாரத் துறை, 1946ல் நெடுஞ்சாலைத் துறை, 1961ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 1970ல் குடிசை மாற்று வாரியம், 1971ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், 1978ல் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம் மற்றும் 2021இல் நீர்வளத்துறை இப்படி பல துறைகள் பிரிக்கப்பட்டன.

கட்டடங்களாக தமிழ்நாட்டில் மூலதனச் சொத்துகளை உருவாக்குவதும், அவற்றைப் பராமரிப்பதும் இத்துறையின் முதன்மையான பணியாகும். சிறந்த நிர்வாகம் மற்றும் வெளிப்படைத் தன்மையை நிலைநாட்டிட மாநிலம் முழுவதும், இத்துறை கணினிமயமாக்கப்பட்டுள்ளது. கட்டுமானம் மற்றும் அதன் கருவிகள் தொடர்பான தொழில்நுட்ப முறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறது. இந்த ஆராய்ச்சிகள் வழியாக, வளங்களைப் பெருக்கிட முனைகிறது; பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேட்டினைக் கட்டுப்படுத்த வழிவகை செய்கிறது; பாரம்பரிய கட்டடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை மறுசீரமைப்பு செய்து, புதுப்பிக்கிறது; அரசின் முக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் மிக முக்கிய பிரமுகர்கள் வருகை தொடர்பான நிகழ்வுகளின்போது, கட்டுமானம் மற்றும் மின் பாதுகாப்புப் பணிகளையும் மேற்கொள்கிறது; மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக மாநிலத்தின் கட்டட உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம், நமது மாநிலத்தைத் தன்னிறைவு பெறச் செய்கிறது.

**நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுகின்றன!**

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் உதவியுடன் தொடக்கம் முதல் இறுதி வரை, ஒப்படைக்கப்படும் பணக்கணக்கு செயல்பாடுகள் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டு வருகின்றன. அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரிகள், நீதிமன்றக் கட்டடங்கள், மாவட்ட ஆட்சியரகங்கள், பள்ளிகள், விடுதிக் கட்டடங்கள், பிற அரசுத் துறைகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு அரசுக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகள், பொதுப்பணித்துறையின் மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன உலகில் எல்லாத் துறைகளிலும், புதிய கண்டுபிடிப்புகள், புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, முன்னேற்றப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதனையொட்டி நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் போது, கட்டுமானங்களின் செலவு பெரிதும் குறைகிறது; கட்டடங்களுக்குக் கம்பீரமான தோற்றம் கிடைக்கிறது. அது, பொது மக்களை ஈர்க்கக் கூடிய அளவில் அழகுடன் மிளிர்கிறது.

**கட்டுமானப் பணிகளில் தர மேலாண்மை;**

இந்திய தரச் சான்று குறிப்புகள், கட்டுமான பொருட்கள் சோதனைக்கான ஆய்வகங்கள், (அனைத்து கட்டுமான தளங்களிலும் அடிப்படை பரிசோதனை கூடங்கள் அமைத்தல், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கின் நடுவே தூண்கள் - ஆர்க்கிடெக்ட் கட்டட வடிவமைப்பு ஆகியவை குறித்து கட்டட மலரில் இக்கட்டுரைகள் விளக்குகின்றன.

**கட்டடங்களில் அமைக்கப்படும் சுகாதார வசதி;**

அடிப்படை வடிவமைப்புகள், நீர்க்கசிவு தடுக்கும் முறைகள், (பொது கட்டடங்களில் கழிவறை தண்ணீர் இணைப்புகள் நீர்க்கசிவு, எம்சான்ட் கலவை தயார் செய்யும் போது பாஸ்ராக் போன்ற கெமிக்கல் பயன்படுத்தி உறுதியான பூச்சு மேற்கொள்ளுதல், பாரம்பரிய கட்டடத்தின் முக்கியத்துவம், பாரம்பரிய கட்டடங்களை புதுப்பிக்கும் வழிமுறைகள் குறித்து இக்கட்டுரைகள் தெளிவாக்குகிறது.

மின் பாதுகாப்பு முறைகள், சோலார் மின் வசதி அமைக்கும் முறைகள் மற்றும் பயன்பாடு குறித்தும், மின்கசிவால் விபத்துக்கள் சேலம் அரசு மருத்துவமனை, திருவாரூர் அரசு மருத்துவமனை; சென்னை ஸ்டான்லி மருத்துவமனை மற்றும், செங்கல்பட்டு மருத்துவமனை லிப்ட் பழுது, இதுபோன்ற பழுதுகள் ஏற்படா வண்ணம் முன்னெச்சரிக்கைகள் குறித்தும் இந்த காலாண்டு இதழ் விவரிக்கிறது.

இந்த 'கட்டட மலர்' காலாண்டு இதழை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்றும் தெரிவித்தார்.

செய்யும் பணிகள் அனைத்தும் சிறப்பாக அமையட்டும்!

செம்மையாக செய்து முடித்து காட்டுவோம்!

காண்போர் அனைவரும் பாராட்டும் வண்ணம் செய்து முடிப்போம்!

உணர்வுடன், ஊக்கமுடன் செய்து காட்டுவோம்!

துறை புகழ் பெற அனைரும் ஒன்று படுவோம்!

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

மேலும், கருத்தரங்கு தொடக்க விழாவிற்கு பின்னர் சமீர் பாபெட் மஹாராஷ்டிரம், அண்ணாமலை பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் வேல்ராஜ், ஆரோ, புதுடெல்லி, எஸ்.ஜே.விஜய், மதன்குமார் அன்னம், மேகித் கபூர், சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் கே.ஆயிரத்தரசு ராஜசேகர், அ.கார்த்திகேயன் ஆகியோர் கருத்தரங்கில் பேசினர்.

இக்கருத்தரங்கில், பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி.சந்திரமோகன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் கே.ஆயிரத்தரசு ராஜசேகர் மற்றும் மண்டல தலைமைப் பொறியாளர்கள், பொதுப்பணித்துறை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.


தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை,**

**திருவண்ணாமலை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.**

கலைஞர் 100 1924 - 2023

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒ.அ.எண். 39/2023–24/ தவஅ/ நாள்: 27.11.2023.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி 2021–22 (சி.எம்.ஆர்.டி.பி நான்கு வழி சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்) (சாலை உபகரணங்கள் அமைத்தல் துணை பணி)** திருவண்ணாமலை (நெ), க(ம)ப, கோட்டத்திற்குட்பட்ட தண்டராம்பட்டு (நெ), க(ம)ப உட்கோட்டத்தைச் சார்ந்த ஒரு பணிக்கு **இரு உறைமுறையில் இணையவழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 18.12.2023** அன்று **12.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, இணைய வழி முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **01.12.2023** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப, வட்டம், திருவண்ணாமலை**

செ.ம.தொ.இ./6415/ஒப்பந்தப்புள்ளி/2023




சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மாநில இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கழக கொடி ஏற்றி 1000பேருக்கு மதிய உணவு – இனிப்புகளை வழங்கினார். இதில் மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் மாவட்ட பொருளாளர் எம்.ஆனந்தன் பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ஏ.ராஜ், பி.சாந்தி, பகுதி நிர்வாகிகள் ஆர்.சி.ஆசைதம்பி, எம்.வி.குமார், ஆர்.எஸ். சம்பத், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், வட்ட செயலாளர்கள் த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குறுத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம். ராஜா,மு.சிவக்குமார், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பாஸ்கர், ஓய்.ரஜினிநந்தி,ஆர்.ரஜினிபாபு, டி.டி.எம். பாபு, வி.பழனிவேல், பி.எஸ்.சைலஸ், ம.ஜெயராமன், கே.கார்த்திகேயன், ஆர்.தினேஷ்குமார், முருகா எஸ்.ஆறுமுகம், பா.கண்ணபிரான், சு.பரமானந்தம்,மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

செவிலியர்களுக்கு மடி கணினிகள் வழங்கப்பட்டன!

# தமிழ்நாட்டில் புதிய வைரஸ் தாக்குதல் இதுவரை இல்லை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, நவ. 30-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (29.11.2023) சென்னை தேனாம்பேட்டையில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநரகத்தில் மாவட்ட தாய்சேய் நல அலுவலர்கள் மற்றும் பகுதி சுகாதார செவிலியர்களுக்கான மடிக்கணினிகளை வழங்கி கர்ப்பகால நீரிழிவு நோய் செயல்பாட்டு வழிகாட்டி கையேடு மற்றும் பதாகையினை வெளியிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களினால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் ஒன்றான பகுதி சுகாதார செவிலியர்கள் மற்றும் மாவட்ட தாய்சேய்நல அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தவகையில் 1807 ஊரக சுகாதார நிலையங்களுக்கும் மற்றும் 42 மாவட்ட தாய்சேய் நல அலுவலர்களுக்கும் தலா ஒரு மடிக்கணினி வழங்கப்படும் என்கின்ற அறிவிப்பின்படி, இன்று 1852 அலுவலர்களுக்கு ரூ.15.92 கோடி மதிப்பீட்டில் மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் தொடக்கமாக காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் செய்யார் ஆகிய சுகாதார மாவட்டங்களைச் சார்ந்த பகுதி சுகாதார செவிலியர்கள் மற்றும் மாவட்ட தாய்சேய் நல அலுவலர்களைச் சார்ந்த 198 பேருக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த மடிக்கணினிகள் வழங்குவதன் மூலம் தாய்சேய் நல பாதுகாப்பு அலுவலர்கள் பிரசவத்தின் போது தாய் மற்றும் குழந்தைகளின் நலனினை கண்காணித்து எடை, BP, ஹீமோகுளோபின் அளவினை பதிவிடுவதற்கு இந்த மடிக்கணினிகள் பெரிய அளவில் பயன்படும்.

மேலும் பகுதி சுகாதார செவிலியர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் ANM வழங்கும் அறிக்கைகளை ஆராய்ந்து பதிவேற்றுவதற்கும், கர்ப்பகால சேவை, பிரசவ கால சேவை, பிரசவ பிற்கால கவனிப்பு, குழந்தைகள் நலம் மற்றும் இறப்பு குறியீடுகள் போன்றவற்றை PICME யில் பதிவு செய்வதற்கும், ஆய்வு செய்வதற்கும் இந்தக் கணினிகள் பெரிய அளவில் உறுதுணையாக இருக்கும். அதோடு கூடுதல் நிகழ்வாக நீரிழிவு நோய் மருத்துவ நிபுணர்கள் போன்ற மருத்துவ வல்லுநர்களுடன் கர்ப்பக்கால நீரிழிவு நோய் பற்றிய புதிய வழிகாட்டி நெறிமுறைகள் உள்ளடக்கிய புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகத்தில் கர்ப்பகால கர்ப்பிணித் தாய்மார்களுக்கு குறிப்பாக நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஏற்படக்கூடிய சிக்கல்கள், கர்ப்பகால நீரிழிவு நோயினால் சிசுவிற்கு ஏற்படக்கூடிய சிக்கல்கள் போன்ற பல்வேறு தகவல்களை ஆராய்ந்து எதிர்கொள்வதற்கு போன்ற மருத்துவச் சேவைகள் பல தகவல்கள் இந்த வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ளடக்கியிருக்கிறது. கர்ப்பகால நீரிழிவு நோய் என்பது கருவுற்ற தாய்மார்களின் உடலில் இரத்தத்தில் சர்க்கரை அளவை அதிகரிக்க செய்கிறது.

**புதிய வைரஸ் காய்ச்சல்**

சீனாவில் ஒரு புதிய வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாக சொல்லப்பட்டு வருகிறது. அந்த வைரஸ் காய்ச்சல் குழந்தைகளை அதிகமாக பாதிப்பதாக சொல்லப்படுகிறது. இது சம்பந்தமாக உலக சுகாதார நிறுவனம் ஏற்கெனவே எச்சரிக்கை வெளியிட்டிருக்கிறது. மேலும் நமது பொது சுகாதாரத்துறை சார்பாக காய்ச்சல் ஏற்பட்டிருக்கும் குறிப்பாக குழந்தைகளுக்கு மிக கவனமாக கூர்ந்து ஆராய்ந்து வருகிறார்கள். எனவே புதிய வைரஸ் தாக்குதல் தமிழ்நாட்டில் இதுவரை இல்லை.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மரு.எழிலன் நாகநாதன், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.தி.சி. செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, குடும்பநலத்துறை இயக்குநர் மரு.ஹரிசுந்தரி உள்ளிட்ட உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா! கழக மீனவர் அணி சார்பில்

# திருவொற்றியூரில் பல்வேறு இடங்களில் கழகக் கொடியேற்றி அறுசுவை உணவு!

## கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்! வி.இராமநாதன் -இரா.முருகேசன் -கே.பி.சொக்கலிங்கம் பங்கேற்பு!

சென்னை, நவ. 30 -

திருவொற்றியூரில் மாநில மீனவர் அணி சார்பில் மாநில மீனவரணி துணைத்தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கி 3000 நபர்களுக்கு அறுசுவை அசைவ உணவு வழங்கப்பட்டது.

வட்ட கழக செயலாளர் கே.பி.சொக்கலிங்கம் முன்னிலை வகிக்க, தலைமை செயற்குழு உறுப்பினர் வி. ராமநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் பங்கேற்று சிறப்பித்தனர்.

மாநில கழக மீனவர் அணி சார்பில் மாநில மீனவரணி துணைத் தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையேற்று காலை 8.00 மணியளவில் கே.வி.கே.குப்பத்தில் கழக இருவண்ணக் கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

காலை 11.00 மணி அளவில் திருவொற்றியூர் நெடுஞ்சாலை விம்கோ நகர் மெட்ரோ பேருந்து நிலையம் அருகில் வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் முன்னிலையில் ஆயிரம் நபர்களுக்கு அறுசுவை அசைவ உணவு இனிப்பு மற்றும் பிரியாணி வழங்கினார்.

தொடர்ந்து நன்பகல் : 12.00 மணி அளவில் மணலி விரைவு சாலை தியாகி சத்தியமூர்த்தி நகரில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக பிரதிநிதியும், தியாகி சத்தியமூர்த்தி நகர் தலைவருமான எஸ்.மகேந்திரன் முன்னிலையில் 1000 நபர்களுக்கு அறுசுவ அசைவ உணவு வழங்கினார்.

தொடர்ந்து நண்பகல் 12.30 மணியளவில் கே.வி.கே.குப்பத்தில் உள்ள திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகம் அருகில் உள்ள தியாகச்சுடர் கே.பரசுராமன் நினைவு கலையரங்கம் அருகில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி. இராமநாதன் முன்னிலையில் அசைவ உணவு வழங்கினார்.

இந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் திருவொற்றியூர் மத்திய பகுதி பொருளாளர் எம்.எஸ்.நாகலிங்கம், முன்னாள் மேற்று பகுதி துணை செயலாளர் இ.ரமேஷ், திருவொற்றியூர் மத்திய பகுதி துணை செயலாளர் துர்கா கோதண்டம், வட்ட கழக செயலாளர்கள் இரா.சந்தர், ஏகா.கார்த்திகேயன், மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ்குமார், மாவட்ட பிரதிநிதிகள் கே. கார்த்திகேயன், பி.எஸ். சைலேஷ், ஆர்.தினேஷ் குமார், எஸ்.ஸ்டாலின்

குட்டி (எ) எத்திராஜ், அப்துல் சலீம், தலைமை கழக பேச்சாளர் வாசு.கருணாநிதி, டைலர் மணி, மாவட்ட அயல அணி தலைவர் எஸ். டி.சங்கர், மாவட்ட சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் பால உமாபதி, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எம். கார்த்திக், மாவட்ட வர்த்தக அணி துணைத்தலைவர் பிரட் சுரேஷ், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ச.இளஞ்செழியன், மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் ஜெகன், அயலக அணி துணை அமைப்பாளர் ஆர். பிரபாகரன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் தச.எழிலன்,

ஆ.பாண்டியன், கே. தேசிங்கு, எம்.தயாநிதி, கலைஞர் நகர் பாபு, அல்லிமுத்து, எஸ்.கே.இளங்கோ, கே.சந்தோஷ்குமார், கலை சரவணன், எம்.எஸ்.ரவி, ராஜேந்திரன், எஸ்.செல்வம், எஸ். விஜயராகவன், ஜெ.ஆர்.டி. சேகர், ஆர்.பாலச்சந்தர், மணலி குமார், சின்ன சேக்காடு வசந்தராஜ், ஆர்.குமரன், கே.எஸ்.ஆனந்தன், முத்துராஜ், பாஞ்சாலி ராஜன், ரமேஷ் இம்மானுவேல், ரவி, தொமுச ராஜவேல், லோகு, சண்முகம், இப்ரகிம் பாய், காந்திநகர் செல்வம், எல்லப்பன், கோவிந்தசாமி, சார்லஸ், ஓவியர் முத்துக்கருப்பன், வசந்த், சுரேஷ், பிரவீன், சிங்காரம், ரவி, பாலா, ஜெயபால், மலையபெருமாள், டில்லி, குமார், அன்புசெல்வம், ஜோசப், ராமக்கண்ணு, ரமேஷ், மாணிக்கம் நகர் ஜெபா, மற்றும் மாநில மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி மாணவர் அணி மீனவர் அணி மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், மின்கழக தொ.மு.ச, ஆட்டோ தொ.மு.ச, உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் கலைஞர் அவர்களின் அன்பு உடன்பிறப்புகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.


தமிழ்நாடு அரசு

**பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப ) வட்டம் திருவாரூர்-1.**

**ஒப்பந்த வகை : ஒட்டு மொத்தம் / இனவிலைமுறை**

கலைஞர் 100 1924 - 2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 13 / க (க & ப) வட்டம் / திருவாரூர் / 2023-24 / நாள்: 28.11.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப) வட்டம், திருவாரூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து இரண்டு பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

**1)** மயிலாடுதுறை மாவட்டத்தில் - 2 பணிகளுக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியினை அணுகவும்.

| | | |
|---|---|---|
| 2 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் | 30.11.2023 முதல் 14.12.2023 பிற்பகல் 3.00 மணி வரை. |
| 3 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | 14.12.2023 பிற்பகல் 3.00 மணி வரை. |
| 4 | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 15.12.2023 பிற்பகல் 3.00 மணி முதல். |

**கண்காணிப்புப் பொறியாளர், பொபது**
**கட்டட (க & ப) வட்டம், திருவாரூர்- 1.**

செ.ம.தொ.இ / 6407 / ஒப்பந்தப்புள்ளி /2023




திருவொற்றியூரில் மாநில மீனவர் அணி சார்பில் மாநில மீனவரணி துணைத்தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கழகக் கொடி ஏற்றி இனிப்பு வழங்கி 3000 நபர்களுக்கு அறுசுவை அசைவ உணவு வழங்கப்பட்டது. வட்ட கழக செயலாளர் கே.பி.சொக்கலிங்கம் முன்னிலை வகிக்க, தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ராமநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### எழுத்தாளர் பழ. அதியமான் எழுதிய

# ‘வைக்கம் போராட்டம்’ நூலின் கன்னட மொழிபெயர்ப்பு நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, நவ.30-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுத்தாளர் பழ. அதியமான் அவர்கள் எழுதிய “வைக்கம் போராட்டம்” நூலின் கன்னட மொழிபெயர்ப்பு நூலை வெளியிட்டார் அதன் விபரம் வருமாறு:-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் பழ. அதியமான் அவர்கள் எழுதிய “வைக்கம் போராட்டம்” நூலின் கன்னட மொழிபெயர்ப்பு நூலினை வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்திலுள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றி அமைந்துள்ள தெருக்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததை நீக்கக் கோரி நடந்த வைக்கம் போராட்டத்தில் கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில் தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்று, அந்தப் போராட்டத்திற்கு தலைமை ஏற்றார். பின்பு பல நாட்கள் அங்கு தங்கியிருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்து, அனைத்து மக்களிடமும் வைக்கம் போராட்டம் குறித்து தமது சீர்திருத்த, சமூக நீதிக் கருத்துக்கள் மூலம் பிரச்சாரம் செய்து, வைக்கம் போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். 1923 மார்ச் மாதம் தொடங்கிய வைக்கம் போராட்டம் நடைபெற்று நூறு ஆண்டுகள் ஆகின்றது.

“வைக்கம் போராட்டம் தொடங்கி நூறாண்டுகள் நிறைவு செய்ததையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் 2023ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாள் தொடங்கி ஓராண்டு காலம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்” என்றும், போராட்டத்தின் வரலாற்றையும், வெற்றியையும் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுடன் சேர்ந்து கொண்டாடும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 30.3.2023 அன்று விதி 110ன் கீழ் 11 அறிவிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து, கடந்த ஏப்ரல் 1 ஆம் நாள் கேரளாவில் உள்ள வைக்கத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் ஆகியோர் கலந்து கொண்ட வைக்கம் சத்தியாகிரக போராட்டத்தின் நூற்றாண்டு விழாவில், எழுத்தாளர் பழ.அதியமான் அவர்கள் எழுதிய வைக்கம் போராட்டம் நூலின் மலையாள மொழிப்பெயர்ப்பு வெளியிடப்பட்டது.

இன்றைய தினமான நவம்பர் 29ம் நாள், 1925 ஆம் ஆண்டு வைக்கம் போராட்டத்தின் வெற்றிவிழா வைக்கத்தில் கொண்டாடப்பட்ட நாளாகும். அந்த விழாவிற்கு தந்தை பெரியார் அவர்கள் தலைமையேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க நாளினை நினைவு கூரும் வகையில் இன்றையதினம் எழுத்தாளர் பழ.அதியமான் அவர்கள் எழுதிய வைக்கம் போராட்டம் நூலின் கன்னட மொழிபெயர்ப்பு நூலை முதலமைச்சர் அவர்கள் வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக்கொண்டார். பேராசிரியர் ஸ்ரீதரா மேற்பார்வையில் செல்வகுமார் இந்நூலினை மொழிபெயர்த்துள்ளார். கௌரி மீடியா டிரஸ்ட் நிறுவனத்தோடு இணைந்து தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், வைக்கம் போராட்டம் நூல் ஆசிரியர் பழ.அதியமான், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. இரா. கஜலட்சுமி, மொழிபெயர்ப்புப் பிரிவு இணை இயக்குநர் டாக்டர். சங்கர சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.11.2023) தலைமைச் செயலகத்தில், கோத்தாரி குழுமத்தின் தலைவர் ரஃபிக் அஹமத் மற்றும் எவர்வேன் மற்றும் ஷுடவுன் குழுமத்தின் தலைவர் ரான் ஆகியோர் சந்தித்து, பெரம்பலூர் மாவட்டம், எறையூர் சிப்காட் தொழில் வளாகத்தில் அமைந்துள்ள ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணிப் பூங்காவில் நிறுவப்பட்டுள்ள JR One காலணி உற்பத்தித் தொழிற்சாலையை திறந்து வைத்ததற்காக நன்றி தெரிவித்தனர்.

### மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சிறப்பு பள்ளிகளில் பயிலும்

# மாணவ - மாணவிகள் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்!

*சென்னை, நவ. 30 -*

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ரூ.2.92 கோடி மதிப்பிலான 2 புதிய வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ள கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) முகாம் அலுவலகத்திலிருந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 2.92 கோடி ரூபாய் மதிப்பிலான 2 புதிய வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் 60 மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகள் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ள அச்சுற்றுலா பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளை வழியனுப்பி வைத்தார்.

ஏராளமான உள்ளூர் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல், அன்னியச் செலாவணியினை ஈட்டுதல் ஆகியவற்றில் சுற்று லாத் துறை முக்கிய பங்காற்றுகிறது. இந்தியாவில் சிறப்பான சுற்றுலாத்த லங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முக்கிய இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் பல்வகையான சுற்றுலா தலங்கள், பிரம்மாண்டமான திருக்கோயில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலை மற்றும் வனப்பகுதிகள், அழகிய கடற்கரைகள் போன்ற பல்வேறு சுற்றுலா தலங்கள் பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வகையில் அமைந் துள்ளது. இத்தகைய பெரும் வாய்ப்புகள் அடங்கிய சுற்றுலாத்துறையை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டு உருவாக்கினார். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலா பேருந்து சேவைகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், படகு குழாம்கள் போன்ற பல்வேறு சேவைகளை சுற்றுலா பயணிகளுக்கு வழங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு-ஒகேனக்கல், மைசூர் பெங்களூர், குற்றாலம், நவக்கிரக கோவில்கள் தொகுப்பு மற்றும் மூணார் என மூன்று நாட்கள் செல்லும் சுற்றுலா பயண திட்டங்களும், சென்னை மாமல்லபுரம், காஞ்சிபுரம் மாமல்லபுரம், திருப்பதி, திருவண்ணாமலை, ˙ரீபுரம் தங்க கோவில், புதுச்சேரி, என ஒரு நாள் சுற்றுலா பயண திட்டங்களும். எட்டு நாட்கள் பயணம் செய்யும் தமிழ்நாடு சுற்றுலா, கோவாமந்த்ராலயம் சுற்றுலா பயண திட்டங்களும். 14 நாட்கள் பயணம் செய்யும் தென்னிந்திய சுற்றுலா பயண திட்டங்களும், யுனெஸ்கோ நிறுவ னத்தால் அங்கீகரிக்கப்பட்ட பழமையான பண்பாட்டு சின்னங்களை பார்வையிடும் சுற்றுலா பயண திட்டம் உள்ளிட்ட பல்வேறு வகையான சுற்றுலா பயண திட்டங்கள் பொதுமக்களின் வசதிக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுலா பயண திட்டங்களை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குளிர் சாதன வசதியுடன் கூடிய வால்வோ சொகுசு பேருந்துகள், உயர்தர சொகுசு பேருந்துகள், சாதாரண சொகுசு பேருந்துகள், 18 இருக்கைகளுடன் கூடிய சிறிய ரக சொகுசு பேருந்துகள், என மொத்தம் 14 சொகுசு பேருந்துகளை இயக்கி வருகிறது.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக பல்வேறு சுற்றுலாக்கள் குறித்த தகவல்கள், முன்பதிவு ஆகியவற்றை சுற்றுலா பயணிகளுக்கு வழங்கவும் மற்றும் சுற்றுலாவின் போது ஏற்படும் குறைகளை களையவும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரமும் (24 X 7) செயல்படும் சுற்றுலா உதவி மையம் (*Tourism Help Desk*) மற்றும் கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகின்றது.

2023-24ஆம் ஆண்டிற்கான சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையில், திருப்பதி சுற்றுலா மற்றும் பிற சுற்றுலாக்களை இயக்குவதற்கு ஏற்படும் கூடுதல் தேவைகளை பூர்த்தி செய்ய இரண்டு குளிர் சாதன வால்வோ சொகுசு பேருந்துகள் வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று 2.92 கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டு வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, பூவிருந்தவல்லி பார்வைத்திறன் குறைவுடையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, தாம்பரம் சானிடோரியம் செவித்திறன் குறைவுடையோருக் கான அரசு நடுநிலைப்பள்ளி மற்றும் தாம்பரம் சானிடோரியம் அறிவுசார் குறையுடையோருக்கான அரசு நிறுவனம் ஆகிய மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சிறப்பு பள்ளிகளைச் சேர்ந்த 60 மாணவ, மாணவிகளை தமிழ்நாட்டின் தலைச்சிறந்த சுற்றுலா தலங்களுள் ஒன்றான மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ள அச்சொகுசு சுற்றுலா பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளை வழியனுப்பி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், முதன்மைச் செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தலைவர்/ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. காகர்லா உஷா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் கமல் கிஷோர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு-செ.செந்தமிழ்வேந்தன்-டி.லோகேஷ் முன்னிலை! ஜி.சரண்ராஜ் தலைமை!

# திரு.வி.க.நகர் வடக்குப் பகுதி இளைஞர் அணி சார்பில் நலஉதவிகள்!

## அமைச்சர் கயல்விழி செல்வராஜ்-கலாநிதி வீராசாமி எம்.பி. வழங்குகின்றனர்!

*சென்னை, நவ. 30-*

சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை மனித நேய உதய நாளாக கொண்டாடப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக திரு. வி.க.நகர் வடக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் (உதயம் - 7) மாற்றுத் திறனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கல் நிகழ்ச்சி இன்று (30.11.2023-வியாழக்கிழமை) மாலை 4 மணியளவில் ஓட்டேரி ஹேம்ராஜ் பவனில் நடைபெறுகிறது.

பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.சரண்ராஜ் நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்கிறார். மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி. லோகேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை ஆதி

திராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் வழங்குகின்றனர்.

இவ்விழாவில் மேயர் பிரியாராஜன், ப. தாயகம் கவி எம்.எல்.ஏ., எம். சாமி கண்ணு, சரிதா மகேஷ்குமார், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத், லயன் பி. உதயசங்கர், பெரம்பூர் ஆர. மகேஷ், ஜெ.பால

முருகன், பா.ஜெகதீஷ், க. வினோத், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி. சங்கர் நானா, சே.மணிமாறன், பா.பி.தாஸ் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பிக் கின்றனர்.

மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறுகிறார்.

# சரித்திரம் படைத்துவரும் கழக இருசக்கர வாகனப் பேரணி!

**கோ**டிக்கணக்கான மக்களின் ஆதரவுடன் ஜனநாயகக் களத்தில் புதிய எழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறது தி.மு.க. இளைஞர்களின் இருசக்கர வாகன பேரணி. சேலத்தில் டிசம்பர் 17ம் தேதி நடைபெறவுள்ள மாநில உரிமை மீட்புக்கான கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாட்டின் முழக்கத்தை தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெங்கும் சேர்க்கின்ற விதமாக, 188 இரு சக்கர வாகனங்களைக் கொண்ட DMKriders வாகனப் பேரணியை முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் தி.மு.க. இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார். அவர் தொடங்கி வைத்த அந்தப் பேரணி மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கம்பீரமாக பயணித்து வருகிறது.

பொதுமக்களின் பேராதரவுடன் பயணிக்கும் இளைஞர் படையை எங்களுடைய சிவகங்கை மாவட்டத்தில் என் தொகுதி மானாமதுரையில் கழக நிர்வாகிகளுடன் நான் வரவேற்றது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. ஒன்றிய அரசு தமிழ்நாட்டை எப்படியெல்லாம் வஞ்சித்து வருகிறது என்பதை மக்களிடம் எடுத்துரைத்து வருகிறார்கள் கழக இளைஞர்கள். பா.ஜ.க. செய்யும் கீழ்த்தரமான மதவாத, மொழி ஆதிக்க, மானுட விரோத செயல்களை மக்களிடம் அம்பலப்படுத்தி வருகிறார்கள். கூட்டாட்சி தத்துவத்தை சிதைத்துள்ள பா.ஜ.க. அரசிடம் இருந்து மாநில உரிமைகளை மீட்பதற்கான அவசியத்தை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் புரியும் வகையில் பரப்புரை செய்கிறார்கள். அதுமட்டுமல்ல, கழகத்திற்கும் ஆட்சிக்கும் தலைவரான மு.க.ஸ்டாலின் அவர்கள், மக்களுக்கு செய்துவரும் மகத்தான திட்டங்களையும் பட்டியலிட்டு வருகிறது இந்த இளைஞர் பட்டாளம்.

**தமிழரசி ரவிக்குமார்** எம்.எல்.ஏ.
முன்னாள் அமைச்சர்
மாநில மகளிர் தொண்டரணி
இணை செயலாளர்



குறிப்பாக, கட்டணமில்லா பேருந்து பயணம் மூலம் மாதந்தோறும் குறைந்தது ஆயிரம் ரூபாய் சேமிக்க முடிவதையும், புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாணவிகள் ஆண்டுதோறும் 12,000 ரூபாய் பெறுவதையும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அளிக்கப்படுவதையும் வரிசையாக பட்டியலிடுகின்றனர். இதன் மூலம் பெண்களின் பொருளாதார நிலையில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தையும், அவர்களிடம் பணப்புழக்கம் அதிகரிப்பதையும், கழக இளைஞர்கள் மக்களிடம் எடுத்துரைப்பதை பார்க்கும் போது என்னைப்போன்ற கழக நிர்வாகிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியும், உற்சாகமும் ஏற்படுகிறது. குழந்தைகளின் பசி தீர்க்கும் காலை உணவுத்திட்டத்திற்காக தாய்மார்கள் ஆனந்தக் கண்ணீருடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி சொல்வதையும் இந்த பேரணியில் காண முடிந்தது.

பேரணியாக செல்லும் இளைஞர்களுக்கு குடிநீர் வேண்டுமா, உணவு வேண்டுமா எனக் கேட்டு மக்கள்வழங்குவதைபார்க்கும்போது தி.மு.க.விற்கும் பொதுமக்களுக்குமான பந்தம் எந்தளவிற்கு ஆழமாக இருக்கிறது என்பது மீண்டும் உணர்த்தப்படுகிறது. இப்படி இந்த பேரணியில் என்னால் காண முடிந்த ஏராளமான அம்சங்களை பட்டியலிட்டுக்கொண்டே செல்ல முடியும். நாளைய தலைமுறையின் நம்பிக்கை “திராவிட முன்னேற்றக் கழகம்” என்பதை இந்த பேரணி அழுத்தமாக கூறுகிறது.

சமூக வலைதளங்களில் அதிகமாக தற்போது பகிரப்படும் செய்திகளில் நம்முடைய இளைஞர்களின் இருசக்கர வாகன பேரணியும் ஒன்று. இதுபோன்ற நிகழ்வுகள் பா.ஜ.க.விற்கும் அதன் ரகசிய கூட்டாளியான அ.தி.மு.க.விற்கும் நிச்சயம் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது அந்த கட்சியினரின் சமீபத்திய நடவடிக்கைகள் மூலம் தெள்ளத்தெளிவாக அம்பலமாகியுள்ளது. அதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் தான் ஒன்றிய அரசும், அ.தி.மு.க. போன்றோர்கள் தி.மு.க. மற்றும் அரசுக்கு எதிராக மனசாட்சியே இல்லாமல் வடிகட்டிய பச்சை பொய்யை பரப்புகின்றனர். இந்த பொய்யான செய்திகளை மக்களிடம் கொண்டு சென்று அம்பலப்படுத்தி வருகிறார்கள் நமது கழக இளைஞர் அணியினரால் கரை வேட்டிக்காரார்கள் போல் நியமனப்பதவியில் இருப்பவர்களின் முகத்திரை களும் இங்கே கிழிக்கப்படுகின்றன.

உத்தமர் காந்தியைக் கொன்ற கொடியவன் கோட்சே தூக்கிலிடப்பட்ட நாளில், கோட்சே வாரிசுகளின் அரசியல் அதிகார அராஜகத்தை எதிர்த்து, தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கை வாரிசுகளான கழக உடன்பிறப்புகள் உரிமைப் போருக்கான ஆற்றல் மிக்க ஜனநாயகப் படையின் வீரர்களாக இருசக்கர வாகனத்தில் கழக இளைஞர்கள் பயணித்து வருகின்றனர். சாலையில் கட்டுக்கோப்புடனும் மிகுந்த கண்ணியத்துடனும் பயணிக்கும் இவர்கள் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு முன்மாதிரியாக திகழ்கின்றனர்.

கருப்புசிவப்பு சீருடையுடன் பயணிக்கும் இளைஞர் படை, பாசிஸ்டுகளை விரட்டி மாநில உரிமைகளை மீட்பதற்கான ஜனநாயகப் போரில் மிகப்பெரிய பங்கு வகிக்கின்றனர். 13 நாட்கள் 234 தொகுதிகள் 504 பிரச்சார மையங்கள் 8,647 கிலோமீட்டர் என கோடிக்கணக்கான இளைஞர்களை சந்தித்துவரும் இந்த இருசக்கர வாகனப் பேரணி, கழக வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருக்கும்.

### தொகுதி மேம்பாட்டு நிதியில்

# இரண்டு புதிய பயணிகள் நிழற்குடைகள்!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. இன்று திறந்து வைக்கிறார்!

*சென்னை, நவ. 30-*

இன்று (30.11.2023) காலை 10 மணியளவில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 23 லட்சம் மதிப்பில் வார்டு-40 மண்டலம் -4 பகுதி -10 வடசென்னை நாடாளுமன்ற அலுவலகம் முன்பு மற்றும் தொழுநோய் மருத்துவமனை தண்டையார்பேட்டை இரண்டு புதிய பயணிகள் நிழற்குடை வடசென்னை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி திறந்து வைக்க உள்ளார்.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா. இளைய அருணா எம்.சி., ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், ஆர்.கே.நகர் பொறுப்பாளர் நந்தனம் நம்பிராஜன், ஆர்.கே.நகர் கிழக்கு பகுதிச் செயலாளர் இரா. லட்சுமணன், ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன் எம்.சி., மாமன்ற உறுப்பினர் திருமதி.குமாரி நாகராஜன் எம்.சி., 40- அ வட்டச் செயலாளர் நாகரா ஜன், 40 வது வட்டச் செயலாளர் கோதண்டன், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், அனைத்து அணிகள் சார்ந்த கழக நிர்வாகி கள்,கழக நிர்வாகிகள்,பத்திரிகை நண்பர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்கின்றனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் - சென்னை தென்மேற்கு மாவட்ட மகளிரணி சார்பில்

# சாந்தோம் காதுகேளாதோர் பள்ளி மாணவர்களுக்கு அறுசுவை உணவு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பங்கேற்பு! பானு சலிம் ஏற்பாடு!

*சென்னை, நவ. 30-*

இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மயிலாப்பூர் சாந்தோம் சாலையில் உள்ள C.S.I காதுகேளாதோர் பள்ளி மாணவர்களுக்கு தென் மேற்கு மாவட்ட மகளிரணி சார்பில் அறுசுவை உணவு ஏற்பாடு செய்யப்பட்டு 01.12.2023 வெள்ளிக்கிழமை அன்று மதியம் 12 மணிக்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு உணவு வழங்குகிறார்.

இதில் தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., பகுதி செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.முரளி, நந்தனம்மதி, கே.ஏழுமலை, 125வது வட்டச்செயலாளர் அ.தவநேசன் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகம் மயிலை பகுதி, தியாகராய நகர்பகுதி, வட்ட செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளை சார்ந்த அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மயிலை கிழக்கு/ மேற்கு பகுதி அமைப்பாளர்கள் அ.ரேவதி, கவிதாகுமரி முத்து, தியாகராயநகர் கிழக்கு/மேற்கு அமைப்பாளர்கள் பவானிரவி, மைதிலி மற்றும் மகளிரணி கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்ளுமாறு மாவட்ட அமைப்பாளர் பானுசலிம் கேட்டுக் கொள்கிறார்.

இந்நிகழ்ச்சி மவாட்டஅமைப்பாளர் பானுசலிம், லட்சுமி உதயகுமார், விஜியா, ரேவதிபொன்னுசாமி, சரிதா தங்கம், சாந்தி ராஜா, ராணி, செந்தாமரை, சித்ரா மாவட்ட மகளிரணி ஏற்பாடு செய்து உள்ளனர்.





கேரள மாநிலம் கண்ணூரில் பல்கலைக்கழக மாணவர்களின் ஒருங்கிணைப்பில் கடந்த 2 நாட்களாக நடைபெற்ற 'கண்ணூர் பல்கலைக்கழக இலக்கியத் திருவிழா 2023'ன் நிறைவு விழாவில் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று 'எழுதியும் பேசியும் வளர்ந்த இயக்கம்' என்ற புகழுடைய திராவிட இயக்கமும் அதன் தலைவர்களும், இலக்கியத்தை அனைத்து மக்களுக்குமானதாக பரவலாக்கியது குறித்து விரிவாகப் பேசினார். மேலும், 'மாநில மொழிகளை நம் இலக்கிய வளத்தை, கல்வி உரிமை உள்ளிட்ட மாநில உரிமைகளை பாதுகாக்க தமிழ்நாடும் கேரளமும் இணைந்து பாடுபடுவோம்' எனவும் உரையாற்றினார்.

## மக்கள் வரிப்பணத்தை வீணடித்த அ.தி.மு.க. மீது பா.ஜ.க. அரசு ஏன் வழக்குப் போடவில்லை?

# தமிழ்நாடு அரசு மீது களங்கம் கற்பிக்கவே அமலாக்கத் துறையை பா.ஜ.க. பயன்படுத்துகிறது!

## "நியூஸ் 18" தொலைக்காட்சியில் 'சொல்லதிகாரம்' விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் கார்த்திகேயன் குற்றச்சாட்டு!

**சென்னை, நவ.30–**

**"மக்கள் வரிப்பணத்தை வீணடித்த அ.தி.மு.க. மீது பா.ஜ.க. அரசு ஏன் வழக்குப் போடவில்லை" என்றும் "தமிழ்நாடு அரசு மீது களங்கம் கற்பிக்கவே அமலாக்கத்துறையை பா.ஜ.க. பயன்படுத்துகிறது" என்றும் "நியூஸ் 18" தொலைக்காட்சியில் சொல்லதிகாரம் விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் கார்த்திகேயன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

"நியூஸ் 18 தொலைக்காட்சி"யில் 'தமிழ்நாடு அரசின் மீது களங்கம் கற்பிக்கவே அமலாக்கத்துறையை பா.ஜ.க. பயன்படுத்துகிறது என்ற தி.மு.க.வின் குற்றச்சாட்டு ஆதாரமா? அரசியலா?' என்ற தலைப்பில் நெறியாளர் கார்த்திகைச்செல்வன் நடத்திய 'சொல்லதிகாரம்' விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் கார்த்திகேயனின் விவாதம் வருமாறு :

**நெறியாளர் கார்த்திகைச்செல்வன்:** நீதித்துறை என்கிற போது ஒரு கிளியாரிட்டி தேவைப்படுகிறது. இரண்டு பேருமே கிளைம் செய்றாங்க. அதனைத் தாண்டி இதில் வேறு என்ன சிக்கலைப் பார்க்க வேண்டி இருக்கு? மக்களைப் பொறுத்தவரையில் என்ன கேள்வி இருக்கிறது என்றால் பொதுவாகவே தமிழ்நாட்டில் அல்லது இந்தியா முழுவதும் கனிம வளங்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்கான நிறைய போராட்டங்களை எல்லாம் நடத்திக்கிட்டுத் தான் இருக்கிறார்கள், இதனை எப்படிப் பார்க்கிறீங்க.?

**மூத்த பத்திரிகையாளர் கார்த்திகேயன்:** முதலில் மணல் கொள்ளை நடந்ததா அது விசாரணைக்குப் பிறகு தான் வரும். அதற்குள் நாம் செல்லவிரும்பவில்லை. இதில் யாருக்கும் நான் கிளீன் ஷீட் கொடுக்க விரும்பவில்லை, தவறு நடந்தது என்றும் சொல்லவில்லை. இதில் அடிப்படையில் நாம் பார்க்க வேண்டிய விஷயம். ஒரு வழக்குப் பதிவு செய்யும் போது அதற்கான நடைமுறைகள் இருக்கிறது. அதனைத் தான் நீதிமன்றம் கேட்டிருக்கிறது.

இன்றைக்கு பல கிரிமினல் வழக்குகள் இப்படித் தான் கிராஸ் ஆகிறது. இன்றைக்கு இவர்கள், 4730 கோடி ரூபாய் அளவுக்கு மணல் எடுக்கப்பட்டு, நஷ்டம் ஏற்பட்டு இருக்கு என்று சொல்கிறார்கள். பா.ஜ.க. வின் தலைவர் ஆந்திராவில் இருக்கக் கூடியவர் ரகுபதி பட்டேஸ்வரி, அவர் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் வெளிப்படையாக பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தி ஒரு குற்றச்சாட்டை வைத்தார்.

ரூபாய் 2000 கோடிக்கு மணல் கொள்ளை நடந்திருக்கிறது. அங்கே ஜே.பி. இன்டஸ்ட்ரீஸ் என்று ஜெயபிரகாஷ் இன்டஸ்ட்ரீஸ் என்கிற ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டு மாதம் 188 கோடி ரூபாய், அதில் 120 கோடி ரூபாய் ஆந்திர முதலமைச்சர் ஜெகனுக்கு மட்டும் போய்ச் சேருகிறது என்று சொல்லி, அவர் ஒரு குற்றச் சாட்டை வைக்கிறார்.

இதற்கு முன்பு ஏற்கனவே ஈ.டி. இவர்கள் மீது சி.பி.ஐ.விசாரணை வேண்டும் என்று சொல்லி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சி கேட்கிறது, பா.ஜ.க.வும் கேட்கிறது. தெலுங்குதேசமும் கேட்கிறது. இது வரை எந்த ஈ.டி.யும் அங்கே போகவில்லை. அந்த வழக்கு சம்பந்தமாக அங்கே எப்.ஐ.ஆர். கூட இருக்கிறது. ஏன் இது வரைக்கும் எந்த ஈ.டி.யும் அங்கே போகவில்லை? எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை? அடிப்படையான கேள்வி அதுதான். இங்கே பேசியவர்கள் 'தவறு நடந்து விட்டால் வரக்கூடாதா?' என்று கேட்டார்கள். இதற்கான பதிலை நேற்று உச்சநீதிமன்றத்தில் நீதியரசர் எஸ்.கே. கௌல் தலைமை தாங்கக் கூடிய அந்த பெஞ்ச் முக்கியமான தீர்ப்பு வழங்கியுள்ளது.

2022 இல் பி.எம்.எல்.ஏ.வில் கொண்டு வந்த சட்டத்திருத்தங்களை உச்சநீதிமன்றம் ஒப்புக் கொண்டது. அதனை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்ற பெட்டிஷன் வந்தபோது முடியவே முடியாது என்று உச்சநீதிமன்றத்தில் வாதிட்டது ஒன்றிய அரசு.

"இல்லை. மறு ஆய்வு செய்ய முடியாது என்று சொல்வதற்கு நீங்கள் யார்? நாங்கள் மறு ஆய்வு செய்வோம்" என்று ஏற்றுக்கொண்டு அதனை விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வழக்கில் தெளிவாக நேற்று நீதியரசர் சஞ்சய் கண்ணா கூறுகிறார். "ஒரு குற்றம் நடக்காமல் நீங்கள் வெறும் 120-பியில் மட்டும் வைத்துக் கொண்டு எங்களிடம் வந்து. நாங்கள் பி.எம்.எல்.ஏ.வை இன்வலப் செய்வோம் என்று உங்களால் சொல்லமுடியுமா?, முடியாது, உங்களுக்கு அந்த அதிகாரம் கிடையாது. பி.எம்.எல். ஏ.வராது" என்று சொல்றாங்க. செக்சன் திரி ஆப் பி.எம்.எல்.ஏ. வில் அப்பன்ஸை ட்ரை செய்ய முடியும்.

நீங்கள் ஒரு வழக்கைப் போட்டுவிட்டு வந்து, சதித் திட்டம் தீட்டப்பட்டு இருக்கு 120-பியில் அதனை வைத்துக் கொண்டு நாங்கள் பி.எம்.எல். கொண்டு வறேன், ஈ.டி. கைது செய்யும் எனச் சொல்லி, இந்த வழக்கு போட முடியாது" என்று சொன்னார்கள்.

இதையே தான் முன்பு பங்கல்ஜன், பஞ்சால் என்பவர்களுடைய வழக்கிலேயும் கைது செய்ததையே ரத்து செய்தார்கள். இப்போது தான் சில மாதங்களுக்கு முன்பு நடந்தது. உச்சநீதிமன்றம் சொல்கிறது. உங்களுக்கு கொடுத்து இருக்கிற அதிகாரம், இந்தியாவில் இருக்கக் கூடிய அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விசாரனை அமைப்பு. அதற்காக இதனைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்று சொல்லி, கைது செய்யப்பட்டதையே ரத்து செய்து அவர்களை விடுதலை செய்தது. எம்.த்ரீ.எம். என்ற ஒரு நிறுவனம்; அவர்களிடம் அரசு சேலஞ்ச் செய்தது அந்த வழக்கில். அதிலேயும் தெளிவாகச் சொன்னார்கள், "நடைமுறைகள் வேண்டும். உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதற்காக, உங்கள் இஷ்டத்துக்கு ஒருவரை கைது செய்ய முடியாது. அதே போல காரணம் சொல்ல முடியாது". அந்த வழக்கில் முக்கியமாக சொன்ன ஒரு விஷயம் 'ஒருவரை பி.எம்.எல்.வில் ஈ.டி. கைது செய்யும் போது வாய்மொழியில் எதற்காக கைது செய்கிறோம் என்று சொன்னால் போதும். எழுத்து மூலமாக கொடுக்கவே வேண்டாம்' என்று ஈடி. சொன்னது; ஒன்றிய அரசும் சொன்னது.

உச்சநீதிமன்றம், "அதனையெல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாது" என்று தெளிவாகவே கூறிவிட்டது. நீங்கள் எழுத்துப்பூர்வமாக ஒவ்வொருவருக்கும் 'என்ன காரணத்திற்காக கைது செய்யப்படுகிறார்கள்' என்று கொடுக்க வேண்டும். இதுவரைக்கும் ஒரு வழக்கிலாவது இப்படி ஈ.டி. கொடுத்து இருக்கிறதா?



பத்திரிகையாளர் கார்த்திகேயன்

நெறியாளர் கார்த்திகைச்செல்வன்

அதனுடைய நீட்சி தான் இப்போது எங்கே வந்து நிற்கிறது என்றால் ஜூரிஸ்டிக்சனே இல்லாமல் ஏதோ ஒரு வழக்கு இருக்கிறது என்றால் அதனை நாங்கள் விசாரிக்கிறோம் என்று வருகிறார்கள்.

**நெறியாளர்:** அதனால் தான் ஆச்சார்யா என்ன சொல்கிறார்? ஒரு விசாரணைக்குப் போகிறார்கள். பல்வேறு தகவல்கள் வருகிறது என்றால் அதனுடைய தொடர்ச்சியாக அந்த வழக்கில் போகத்தானே செய்யும். அதனை நீங்கள் எப்படி தடுப்பது? ஒரு வேளை ஆதாரங்கள் இல்லாமல் போகப்போகிறார்களா? ஆதாரங்களைக் கொடுக்க வேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிறதில்லையா?

**கார்த்திகேயன்:** இந்தக் கேள்விக்கு இந்த வருடம் ஜனவரியில் டெல்லி உயர்நீதிமன்றத்தில் நீதியரசர் எஸ்வன் சர்மா தலைமையில் உள்ள ஒரு அமர்வு இருக்கிறது. அவர் தெள்ளத் தெளிவாக ஒரு தீர்ப்பே வழங்கி இருக்கிறார். அவர் என்ன சொல்கிறார்; "நீங்கள் போய் விசாரித்துவிட்டு அனுமானத்தின் அடிப்படையில் ஒரு தவறு நடந்து இருக்கும் என்று உங்களிடம் இருக்கின்ற எவிடென்சை வைத்துக் கொண்டு போய் பி.எம்.எல்.ஏ.வை இன்வெலப் செய்கிறேன் என்று சொல்லிட்டு, அதற்குப் பிறகு எனக்குத் தரவுகள் இதில் கிடைக்கும். இதில் பி.எம்.எல்.ஏ. வில் ஈ.டி.க்கு உட்பட்டது தான் என்று சொல்லி அனுமானத்தில் எல்லாம் செய்ய முடியாது. உங்களிடம் இருக்கின்ற மெட்டீரியல் தரவுகள் இருக்கக் கூடியவைகளை ஜஸ்டிஃபை செய்ய வேண்டும். நான் விசாரிக்கிறேன். அதற்கு பிறகு மேல் விசாரணையை எல்லாம் செய்ய முடியாது" என்பதை டெல்லி உயர்நீதிமன்றம் மிகவும் தெளிவாக அந்த வழக்கில் சொல்லி இருக்கிறது.

ஜூரிஸ்டிக்சனில் தெளிவாக இருக்கிறது. இதனை ஒருமாநில அரசு தான் விசாரிக்க வேண்டும். ஒரு எப்.ஐ.ஆர்.போட்டு, கரப்சன் ஆக்ட்டிலோ இல்லை என்றால் வேறு ஏதேனும் ஒரு கிரைமிலோ இதனை விசாரிக்கலாம். பி.எம்.எல்.ஏ. எதில் வருகிறது? அதில் இருந்து ஒரு பண பரிமாற்றம் நடந்தால் மட்டும் தானே விசாரிக்க வரவேண்டும். இதில் என்ன நடந்தது என்றே தெரியாது. ஆனால் இதில் நேரடியாக "ஐந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சம்மன் அனுப்புவேன், நீங்கள் வந்து நிற்க வேண்டும்" என்று சொன்னால், அதனையும் அவர்கள் என்னென்ன கேட்கிறார்கள் என்றால் "அங்கே என்னென்ன குவாரி இருக்கு? ஜி.பி.எஸ், டேங்கி, ஜியோ டேங்கியோடு கொடுங்கள் என்று கேட்கிறார்கள். எத்தனை விற்றிருக்கிறீர்கள் என்று சொல்லிக் கேட்கிறார்கள். இதனையெல்லாம் கேட்பதற்கு எதாவது ஆர்டர் இருக்கிறதா.? இதில் என்ன தவறு நடந்து இருக்கிறது என்று உறுதிப்படுத்த முடியுமா? அதனால் தான் கோர்ட் இதில் ஸ்டே கொடுத்து இருக்கிறது. அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அவர்கள் நேரடியாக வந்து, அவர்கள் நினைத்த மாதிரி எல்லாம் கேட்க முடியாது என்று சொல்கிறது. அந்த நான்கு எப்.ஐ.ஆரிலும்,

**நெறியாளர்:** இந்தியா முழுவதும் நடக்கிறது. தமிழ்நாட்டில் நடந்த ஒரு வரலாற்றை சொல்கிறேன். மணிக்குமார் என்ற நீதிபதி எல்லா கல்குவாரிகளையும் மூடச் சொல்கிறார். அங்கே இருந்தே இந்தப் பிரச்சினைகள் இருக்கிறது இல்லையா, இதனை நாம் அப்படியே கடந்து போவதும் சரியாக இருக்க முடியுமா?

**கார்த்திகேயன்:** அதனால்தான் ஆரம்பத்திலே நான் ஒரு கேவியட் பைல் செய்தேன். இதில் தவறு நடந்ததா, நடக்கவில்லையா என்பதற்குள் எல்லாம் நான் போகவே விரும்பவில்லை. யாரையும் கிளீன் ஷீட் கொடுக்க முடியாது. யாரையும் குற்றம் சாட்டவும் நான் தயாராக இல்லை. இவை விசாரிக்கப்படவேண்டும். நான் என்ன கேட்கிறேன். உண்மையிலேயே நீங்கள் இவ்வளவு பேசுகிறீர்கள் இல்லையா? உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுங்கள், சி.பி.ஐ. விசாரணை கேளுங்கள். இதே விசாரணையைத் தானே அண்டை மாநிலமான ஆந்திராவில் சி.பி.ஐ. விசாரணை கேட்கிறீர்கள் இல்லையா, இங்கே வழக்குத் தொடுங்கள். சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்று. இதே மாதிரி பல்வேறு வழக்குகள் நடந்திருக்கின்றன. இங்கே அதே ஆட்சி நடைபெறுகிறது. அதனால் விசாரணையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லி சி.பி.ஐ.விசாரணை கேட்கலாமே. இங்கே ஏன் அதனைச் செய்ய மறுக்கிறீர்கள்?

**நெறியாளர்:** உங்களின் நிறைவுக் கருத்தைக் கூறுங்கள்.

**கார்த்திகேயன்:** ஆட்சி மாற்றம் வந்த உடனேயே என்ன மாற்றம் வருகிறது என்பதற்கு ஒரு உதாரணம் மட்டும் சொல்கிறேன். போன வாரம் விவேக் வெங்கடசாமி என்ற தெலுங்கானாவில் இருக்கின்ற ஒரு எம்.எல்.ஏ., காங்கிரஸ் வேட்பாளர். அங்கே நிற்கக் கூடியவர்களிலே பெரும் பணக்காரர் அவர்தான். அவர் டிக்ளேர் செய்தது மட்டும் 600 கோடி ரூபாய் சொத்து. கரெக்டா எலக்சன் வரும் போது அவருக்கு எதிரா ரெய்டு எல்லாம் நடந்தது. ஈடி. எல்லாம் வந்தது.

அவர் இந்த மாத ஆரம்பத்தில் அதாவது நவம்பர் மாதம் முதல் வாரம் வரை அவர் பி.ஜே.பி.யில் இருந்தார். இதே பணக்காரர் தான், 100 கோடி ரூபாய் பணப் பரிவர்த்தனை என்று அவர் மீது புகார் எல்லாம் இருந்தது. அப்போது ஈ.டி வரவில்லை. அவர் காங்கிரசுக்கு மாறினார். பா.ஜ.க.வில் கமிட்டியில் சேர்மனாகவே இருந்தார். ஆனால் காங்கிரஸில் மாறி இங்கே வேட்பாளராக அறிவிக்கப்பட்ட உடனே ஈ.டி. வந்தது. அவர் மீது வழக்கும் வந்தது. இதனை வைத்து நாம் என்ன புரிந்து கொள்வது? அப்போ, தேர்தல் நடக்கும் போது அவர் மீது ஈடி சம்மன் எதற்காக வருகிறது? சம்மன் செய்யுங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. தேர்தல் நடக்கின்ற அன்றைக்கு முதலமைச்சருடைய மகனுக்கு எதற்காக வருகிறது? இப்போது இங்கே பேசியவர் கேட்கிறார் இல்லையா, சம்மன் அனுப்பலைன்னா அடுத்தது அரெஸ்ட் என்று. அதற்காகத்தான் இந்த வழக்கில் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள்.


mere non cooperation of witness in response to the summon issued under section 50 under act 202, could not be enough to render him/her, liabel to be arrested under section 19.(சட்டம் 202 இன் கீழ் சட்டப்பிரிவு 50ன் கீழ் வழங்கப்பட்ட சம்மனுக்குப் பதிலளிக்கும் வகையில் சாட்சியின் ஒத்துழையாமை, அவரை / அவளை, பிரிவு 19ன் கீழ் கைது செய்யப்'போதுமானதாக இருக்க முடியாது.)

இதை சொல்லிட்டு அந்த பங்கஜன் பஜன் கேஸில் உச்சநீதிமன்றம் சொன்னது, "நீங்கள் ஒருவரை விசாரணைக்கு கூப்பிடுகிறீர்கள். ஒப்புதல் வாக்கு மூலம் கொடுக்கச் சொல்லி கேட்கிறீர்கள். அவர் கொடுக்கவில்லை என்றால் யார் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறீங்க? கொடுக்கவில்லை என்றால் அவர் குற்றவாளி என்று முடிவு செய்துவிடுவீங்களா? ஒத்துழைப்பு தரவில்லை என்றாலே அவர் குற்றவாளி ஆகிவிடுவாரா?" என்று உச்சநீதிமன்றம் கேட்டிருக்கிறது. இதில் முக்கியமான விஷயம், ஈ.டி. சம்மன் அனுப்பும் போது, நீங்கள் ஒரு அக்யூஸ்டைக் கூப்பிடுங்கள், விட்னஸைக் கூப்பிடுங்கள் என்று சொல்லாது. இரண்டாவது இங்கே பேசிய நண்பர் சொன்னதில் ஒரே ஒரு திருத்தம்; ஒப்புதல் வாக்குமூலம் வாங்கிட்டால் இவரை கஸ்டடியில் வைத்துவிட்டு, குற்றவாளி என்று சொல்லப்படுகிறவர்தான், தான் நிரபராதி என்று நிரூபிக்க வேண்டும்.

இங்கே ஒரு ஒரு விஷயத்தை மட்டும் நான் கேட்கிறேன். ஆயுஷ்மான் பாரத் பற்றி எல்லாரும் சொன்னார்கள். ஆயூஷ்மான் பாரத்தின் பிரதமரின் காப்பீடு திட்டத்தில், செத்துபோனவர்களுக்கு சிகிச்சை அளித்ததாக அரசாங்கமே பணம் கொடுத்தார்கள்.

4761 பேர். வெறும் ஏழு ஆதார் கார்டை வைத்து ரிஜிஸ்ட்டர் ஆகி இருக்காங்க. நடந்தது 2017, 18, 19, 20, 21வரைக்கும். அதுவும் தமிழ்நாட்டில் தான் அதிகமாக நடந்திருக்கு. அப்போது இருந்த முதலமைச்சர் யார். சுகாதாரத்துறை அமைச்சர் யார் தமிழ்நாட்டில்? அவர்களுக்கு ஈடி வந்திருக்கா.? மக்கள் வரிப் பணம் வீணாபோய் இருக்கு. ஏமாற்றம் நடந்திருக்கு. அப்போ அ.தி.மு.க. மீது பா.ஜ.க. அரசு ஏன் இது வரைக்கும் வழக்கு போடவில்லை? நான் கேட்பது அதில் முகாந்தரம் இருக்கிறது என்று ஒரு விசாரணை யாவது நடந்திருக்கா? இவர்கள் செலக்டிவாக ஈ.டியைப் பயன்படுத்துகிறார்கள் என்றுதானே தெரிகிறது.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் கார்த்திகேயன் பேட்டியளித்தார்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் நேற்று (28.11.2023) சென்னை, கீழ்ப்பாக்கம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில், மண்டல இணைப்பதிவாளகள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர்.கே. கோபால்., , கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.ந.சுப்பையன். , சிறப்புபணி அலுவலர் (தமிழ்நாடு கூட்டுறவு வங்கி) எம்.பி.சிவன்அருள்.,(ஓய்வு) ஆகியோர் உள்ளனர்.

## தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் அறிவிப்பு

தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 2.12.2023 சனிக்கிழமை, காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு மற்றும்
தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை18.
நாள் : 25.11.2023,

**மாஸ்டர் பெ. சேகர்**
செயலாளர், தி.மு.க. தொண்டர் அணி


## கொரட்டூரில் மின்சாரம் தாக்கி

# உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் மறைவு!

## நகர்மன்ற உறுப்பினராகவும் இருந்தவர்!

அம்பத்தூர், நவ.30

சென்னை கொரட்டூரில் மின்சாரம் பாய்ந்து சென்னை உயர்நீதி மன்ற அரசு தரப்பு வழக்கறிஞரும், அம்பத்தூர் முன்னாள் நகர மன்ற உறுப்பினருமான சம்பத்குமார் (வயது 57) என்பவர் உயிரிழந்துள்ளார்.



சம்பத் குமார்

சென்னை யாதவாள் தெருவை சேர்ந்தவர் சம்பத்குமார் (வயது 57), சுந்தரதேவி (வயது 50) தம்பதியினர்.

இருவரும் அம்பத்தூர் முன்னாள் நகர மன்ற உறுப்பினராக இருந்துள்ளனர். சம்பத்குமார் சென்னை உயர்நீதி மன்றத்தின் அரசு தரப்பு வழக்கறிஞராக பணியாற்றிக் கொண்டிருந்தார். அதுமட்டுமில்லாமல் அம்பத்தூர் தெற்கு பகுதி தி.மு.க வழக்கறிஞர் பிரிவில் முக்கிய பொறுப்பையும் வகித்து வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் தினமும் காலை 6:00 மணிமுதல் 7 மணி வரை உடற்பயிற்சி மற்றும் நடைப்பயிற்சி மேற்கொள்வது வழக்கம் என கூறப்படுகிறது அதன்படி நேற்று காலை கொரட்டூர் ஜம்புகேஸ்வரர் கோயில் தெருவில் நடைபயிற்சி சென்று கொண்டிருந்த போது, திடீரென மழை பெய்ததால் அங்குள்ள இரும்பு வெல்டிங் செய்யும் பட்டறைக்குள் நுழைந்துள்ளார்.

அப்போது அங்கிருந்து மின்சார ஒயரிலிருந்து இவர் மீது மின்சாரம் பாய்ந்து உள்ளது. இதில் தூக்கி வீசப்பட்ட அவர் அங்கேயே மயங்கி விழுந்தார். பின்னர் அருகில் இருந்தவர்கள் அவரைமீட்டு அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். பிறகு அரசு கீழ்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற போது அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் வரும் வழியிலேயே உயிரிழந்து விட்டதாக தெரிவித்துள்ளனர்.

நகரமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ள சம்பத்குமார் உயிரிழந்த தகவலறிந்து அம்பத்தூர் தொகுதி தி.மு.க.வினரும், அவர் நகர மன்ற உறுப்பினராக இருந்த வார்டு மக்களும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.



கழக இளைஞரணி செயலாளர் இளைஞர்களின் எழுச்சி நாயகன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பூவிருந்தவல்லி பார்வையற்றோர் பள்ளியில் திருவள்ளூர் மத்திய பூவிருந்தவல்லி நகர திமுக சார்பில் நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை ஏற்பாட்டில் அசைவ உணவு மற்றும் நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நவ 27 அன்று பிறந்த குழந்தைகளுக்கு நகர இளைஞரணி சார்பில் நகர இளைஞரணி அமைப்பாளர் ஜெ.அமிதாப் ஏற்பாட்டில் தங்க மோதிரம் அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பார்வையற்றவர்களுக்கு அசைவ உணவு மற்றும் நலத்திட்ட வழங்கி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிறந்த குழந்தைகளுக்கு தங்கம் மோதிரத்தை அணிவித்து கிட் பேக் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், காயத்திரிஸ்ரீதர், பா.நரேஷ்குமார், நகர கழக நிர்வாகிகள் பூவை எச்.தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லிராணிமலர்மண்ணன், ஜெ.அசோகுமார், ஜெ.சுதாகர், இரா. புண்ணியகோட்டி, ப.அன்பழகன், பி.சௌந்தரராஜன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் தலைமையில் ஆலந்தூர், மான்போர்ட் பள்ளியில் நடைபெற்ற மாபெரும் கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மண்டல குழுத்தலைவர் என்.சந்திரன், பகுதி செயலாளர் பி.குணாளன் வீ.விஜயகுமார், ஜானகிராமன், பூபாலன், கலாநிதி, சத்தியபிரபு, வட்டச் செயலாளர்கள் முரளிகிருஷ்ணன், சீனிவாசன், நடராஜன், சுலைமான், பிரவீன், விக்னேஷ், சந்தோஷ், விக்கி, சஞ்சீவி விஜயபாபு, விஜயபாபு, சுனில், கிரண், கார்த்திக், உதயா, லட்சுமிபதி ,அலிம், கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# ஆற்றலின் பிறப்பிடம் - வீரத்தின் மணிமகுடம் - எழுச்சிமிகு இளம் தலைவர்!



தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் நான்காம் தலைமுறை கண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டு தலைமையேற்று நடத்தப்பட்ட திராவிட இயக்கம் தி.மு.க.

தமிழுக்காக. தமிழ் மக்களின் உரிமைக்காக தமிழ்நாட்டின் உயிர்நாடியாக இருந்து ஒட்டுமொத்த மக்களின் நெஞ்சங்களில் நீங்காஇடம்கொண்டு இப்பொழுதும் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் வீரமும் விவேகமும் ஆற்றலும் எழுச்சியும் ஒருங்கிணைந்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 50 ஆண்டுகாலம் கட்டிக் காத்த தி.மு.க.


50 ஆண்டுகாலத்திற்கு மேலாக தன்னை முழுமையாக இளம் வயதிலிருந்து தி.மு.க. வின் வளர்ச்சிக்காக முன்னேற்றத்திற்காக ஒட்டுமொத்த இளைஞர்களையும் அரவணைத்து கட்டி காத்து கழகத்தில் இணைத்து மாபெரும் உழைப்பாளியாக எழுச்சிமிகு முன்னணி தொண்டராக தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நமக்காக உழைக்கும் ஒரு புனிதமான நேர்மையான மனிதநேயமிக்க ஒரு தலைவர் இருக்கிறார் என்கிற மன உறுதியில் மூத்தவர் முதல் இளைஞர்கள் வரை அனைத்து மக்களும் விரும்புகிற திராவிட இயக்கத்தின் எழுச்சிமிகு முன்னோடிகள் மூத்த தலைவர்கள் தொண்டர்கள் நகர்புற கிராமப்புற நிர்வாகிகள் உட்பட அத்துனை பேரையும் பெயர் சொல்லி அழைக்கிற அளவுக்கு உரிமையோடு அவர்களின் குடும்ப பாசத்துடன் மூத்தவர்களுக்கு தம்பியாக இளையவர்களுக்கு அண்ணனாக தமிழ்நாடு முழுமையாக கிராமங்களில். நகரங்களில். கால் வைக்காத இடமே இல்லை என்று சொல்லுகிற அளவுக்கு செயல்பட்டு இன்றைக்கு கழகத்தை கட்டிக்காத்து வருகிறார் எழுச்சிமிகு தலைவர் தளபதி.

கழகத்தையும் கட்டிக் காத்து மக்கள் செல்வாக்கோடு ஆட்சியிலும் அமர்ந்து மக்கள் பணி மகத்தான பணியாக. சமூக நீதியை நிலைநாட்டி எந்த நாளும்வாழ்வில் முன்னேற்றம் இல்லையே என்று ஏங்கிக் கிடந்த ஒட்டுமொத்த தமிழர்கள் வாழ்வில் கல்வியில் தொழிலில் விவசாயத்தில் மக்களின் அடிப்படை உரிமைகளை பெற்றிட பெண்கள் முன்னேற்றத்திற்காக ஆட்சியை முன்னிலைப்படுத்தி எல்லா மக்களையும் கட்டிக் காத்து அரவணைத்து ஏசினாலும் தூற்றினாலும் போற்றினாலும் எதைப்பற்றியும் கவலைப்படாமல் ஞானிகளை போல் யோகிகளை போல் அனை வரையும் அரவணைத்து ஆதரித்து கட்டிக் காத்து ஆட்சியை நடத்துகிற போற்றுதலுக்குரிய மக்களின் தலைவர்களாக பேரறிஞர் அண்ணா அவர்களும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும் வாழ்ந்தார்கள்.

தமிழ்நாட்டில் இளம் தலைவராக மக்களின் நம்பிக்கை பெற்றவராக ஒட்டுமொத்த இளைஞர்களின் ஆற்றலுக்கும் செயலுக்கும் போற்றுதலுக்கும் உரிய மனிதநேயமிக்க நாயகனாக உதயநிதி ஸ்டாலின் செயல்படுகிறார்.

எப்பொழுதெல்லாம் ஒன்றிய அரசின் மூலம் மக்களுக்கு பாதிப்பு வருகிறதோ அப்பொழு தெல்லாம் முதல் குரலாக ஓங்கி ஒலிக்கும் அந்த மன உறுதியும் மன தைரியமும் துணிச்சல் மிக்க இளம்தலைவர்.

இன்றைய தமிழக இளைஞர்கள் தங்களுக்கு பாதுகாப்பான ஒரு மாவீரன் கிடைத்திருக்கிறார் என்று போற்றுகிறார்கள், பாராட்டுகிறார்கள். இளம் தலைவர் தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையேற்று செயல்பட லட்சக்கணக்கான இளைஞர்கள், மாணவர்கள். இளம் மகளிர் அணிவகுத்து உறுதியேற்று இருக்கிறார்கள்.



**கோவை கே.செல்வராஜ்**
முன்னாள் எம்.எல்.ஏ.
கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர்

தமிழ்நாட்டில் 60 வயதுக்கு மேலான மூத்த முன்னோடிகள் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியும் கட்சிப் பணிகளும் அறிந்திருப்பதற்கு வாய்ப்புண்டு திராவிட இயக்கத்தின் செயல்பாடுகள் தெரிந்திருப்பதற்கு வாய்ப்புண்டு.

ஆனால் 18 வயதில் இருந்து 45 வயதுக்குள் இருக்கிற இளைஞர்களுக்கு திராவிடம் செய்த சாதனைகள் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் தெரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை 1967இல் இருந்து 197 5 வரை நடைபெற்ற ஆட்சியிலும் 1996 இல் இருந்து 2001 வரை நடந்த ஆட்சியிலும் 2006 இல் இருந்து 2011 வரை நடந்த ஆட்சியிலும் செய்த சாதனைகள் தெரிவதற்கு வாய்ப்புகள் குறைவு .

திராவிடம் என்றால் என்ன என்று தெரியாத ஒரு சில இரண்டு வருட மூன்று வருட கற்றுக் குட்டி அரசியல் தலைவர்கள் என்ற பெயரில் செயல்பட்டு வரும் நபர்களுக்கு தமிழ்நாட்டின் வரலாறும் தெரியாது, திராவிட வரலாறும் தெரியாது, மக்களின் வளர்ச்சியைப் பற்றி தெரியாது, தி.மு.க. ஆட்சியின் சாதனைகளைப் பற்றியும் தெரியாது பெண்ணுரிமையைப் பெற்றுக் கொடுத்தது, தெரியாது. இந்தியாவிலேயே தமிழ்நாடு சிறந்த மாநிலமாக எழுச்சியோடு செயல்பட்டு வருவது தெரியாது

1980 இல் ஆரம்பிக்கப்பட்டு சுயநல கட்சியான பி.ஜே.பி. கட்சிக்கு தமிழகத்தின் ஒட்டுமொத்த வரலாறும் தெரியாது.

வாழ்நாள் முழுவதும் பொய்யும் புரட்டும் பித்தலாட்டமும். மதவெறி ஜாதி வெறி ஆன்மீகம் என்ற பெயரில் போலி வேஷம் போடும் கூட்டத்தை புற முதுகிட்டு ஓடும் அளவுக்கு மன உறுதியோடு தைரியமாக எழுச்சியோடு மக்களின் நாயகனாக இளைஞர்களின் இதயத்துடிப்பாக செயல்பட்டு சனாதனம் மக்கள் விரோத செயல் என்பதை தோல் உரித்துக் காட்டிய இளம் தலைவர்.

2019ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் 2021 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலும் உள்ளாட்சி மன்றத் தேர்தலிலும் தன்னுடைய எழுச்சிமிகு உரையால் பி.ஜே.பி.யின் பொய்யான உறுதிமொழியை ஒரே செங்கலை உயர்த்தி காட்டி ஒட்டுமொத்த தமிழக மக்களையும் தன் வசமாக்கி 100 சதவீத வெற்றியை திமுககூட்டணிக்கு பெற்றுக் கொடுத்த இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல்மிக்க அற்புதமான இளம் தலைவர் வெற்றி வீரர் சில நாட்களுக்கு முன்பு இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசாததை பேசியதாக பிஜேபி ஒரு கருத்தை சொல்லி எப்படியாவது இவர் பயந்து விடுவார் அடங்கி விடுவார். அமைதியாகி விடுவார் என்று ஒரு மாயத் தோற்றத்தை அவர்களே உருவாக்கி குரல் கொடுத்து பார்த்தார்கள்.

இந்தியா முழுவதும் வெத்து கோஷங்களை போட்டு பேசிப் பார்த்தார்கள் .போலி சாமியார்களை கோஷம் போடவைத்தார்கள். அந்த தகுதி இல்லாத கோஷத்தை அடக்கிக் காட்டி நான் எடுத்த முடிவில் மாற மாட்டேன் – சொல்லிய சொல்லிலிருந்து பின் வாங்க மாட்டேன், மனசாட்சி யோடு செயல்படுவேன். மக்களுக்காக உழைப்பதில் பின்வாங்க மாட்டேன், மக்கள் விரோதச் செயலை கடுமையாக எதிர்ப்பேன் என்று கூறி உரத்த குரலில் மன உறுதியோடு கர்ஜித்த இளம் சிங்கம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடைய குரலுக்கு முன்னால் பி.ஜே.பி. என்கிற இயக்கம் அடங்கிவிட்டது சொல்லப்போனால் அடக்கப்பட்டுள்ளது .

இந்தியா முழுவதும் ஒட்டுமொத்த மக்களும் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பார்க்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் எல்லா மாநிலங்களிலும் ஆட்டம் போட்டவர்கள் அமைதியாகிவிட்டார்கள்

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் தமிழ்நாட்டில் திராவிடம் என்றால் என்ன, அதனுடைய கொள்கை என்ன, லட்சியம் என்ன, எத்தனை கொள்கை மறவர்கள் உயிர்த்தியாகம் செய்து தங்களை கொள்கைக்காக மாய்த்துக் கொண்ட தியாகிகளால் வளர்த்த இயக்கம் தி.மு.க. என்பதை இப்பொழுது இருக்கிற இளைஞர்களுக்கு சுமார் 50 வயது வரை இருப்பவர்களுக்கு கூட தெரியாது. ஒட்டுமொத்த மக்கள் தொகையில் தமிழகத்தில் 55 சதவீதம் பேர் 18ல் இருந்து 60 வயசு வரை உள்ளவர்கள் அத்தனை பேருக்கும் எதுவும் நேரடியாக தெரியாது. படித்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டும் .

அப்படிப்பட்ட நிலைப்பாட்டில் தமிழ்நாட்டில் ஒட்டுமொத்த மக்களுக்கும் 75 ஆண்டுகால தி.மு.க. வின் வரலாற்றைத் தெரிவிப்பதற்கு நேரடியாக எடுத்துச் சொல்வதற்கு தொலைக்காட்சி வாயிலாக, தினசரி பத்திரிக்கை கள் வாயிலாக, அறிக்கைகள் வாயிலாக, விவாதங்கள் வாயிலாக, ஒட்டு மொத்த மக்களும் தெரிந்து கொள்கிற அளவுக்கு உடனுக்குடன் பி.ஜே.பி. கட்சியின் போலி விமர்சனம், தமிழ்நாடு ஆளுநரின் அடாவடித்தனத்துக்கும் பதில் சொல்லுகிற விதத்தில் மற்றவர்களுடைய பணத்தில் நன்கொடை என்ற பெயரில் பணத்தை பெற்று வாழ்க்கை நடத்தும் தலைவர் என்கிற பெயரில் செயல்படுபவருக்கும் உடனுக்குடன் பதில் சொல்லுகிற நிலையில் தி.மு.க.வின் தலைவர்கள், அமைச்சர்கள், பதில் அளித்தும் 75 ஆண்டுகாலம் தி.மு.க. மக்களுக்கு ஆற்றிய செயல்களை இந்த புரியாத மனிதர்களுக்கு புரியும் விதத்தில் பதிலளித்து பேசிய உரைகள் அற்புதம். மக்களுக்கு 75 ஆண்டு கால தி.மு.க. செயல்களை. சாதனைகளை எடுத்துச் சொல்வதற்கான ஒரு வாய்ப்பை இவர்கள் கொடுத்ததற்கு நன்றி.

தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் இளம் தலைவராக வலம் வந்து அரசுப் பணிகளை ஆய்வு செய்து, விளையாட்டு வீரர்களை உருவாக்கி உலக அளவில் மாபெரும் சாதனை படைக்கும் அளவுக்கு பயிற்சி கொடுத்து அவர்களுக்கு எல்லா உதவிகளும் செய்து உலக விளையாட்டு அரங்கில் ஏராளமான தங்கப்பதக்கம், வெள்ளி பதக்கம், வெண்கலப்பக்கம் பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி செயல்பட்டு வரும் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

தமிழ்நாட்டில் படிப்பதற்கு வசதி வாய்ப்பு இல்லாத மாணவ மாணவியர்களுக்கு நிதி உதவி செய்து அற்புதமான வாழ்வை அமைத்துக் கொடுக்கும் புதிய திட்டம் மூலம் தற்போது ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். படிக்கும் மாணவ மாணவியர் தமிழ்நாட்டில் மிகக் குறைந்து இருந்த நிலையை மாற்றி இந்தியாவிலேயே அதிகமாக தேர்வு பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர்களாக காவல்துறை அதிகாரிகளாக வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து எல்லா துறைகளிலும் தமிழ்நாட்டை முதல் இடத்திற்கு கொண்டு செல்ல அற்புதமாக உழைத்து வரும் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஒட்டுமொத்த மக்களும் பாராட்டுகிறார்கள்.

சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதி இளைஞர் அணி மாநாடு நடத்துவது புதிய வரலாற்றை எழுச்சியை ஒட்டு மொத்த இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்துவது உறுதி.

தி.மு.க.வில் உழைத்த மூத்த முன்னோடிகளை. தலைவர்களை அரவணைத்து அவர்களைப் போற்றிப் பாராட்டி அவர்களுக்கு பொற்கிழி வழங்கிக் கௌரவித்து அவர்களின் நல்வாழ்த்துகள் பெற்று தமிழ்நாடு முழுவதும் அனைத்து தரப்பு மக்களின் நன்மதிப்பை பெற்று நல்வாழ்த்துக்கள் பெற்று பல்லாண்டு வாழ்ந்து மக்கள் பணியாற்ற வாழ்த்துகிறோம்.

உங்கள் தலைமையில் தமிழ்நாடு எழுச்சியோடு தளபதி அவர்கள் செய்து வரும் அத்தனை பணிகளுக்கும் உறுதுணையாக இருந்து மக்களாட்சித் தத்துவத்தை தாங்கள் நிலை நிறுத்துவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

## வில்லிவாக்கத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

சென்னை, நவ. 30 -

கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர் களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, சென்னை வடகிழக்கு மாவட்ட கழக இளைஞர் அணி மற்றும் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பபில், அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுறுதலின்படி, வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மோரை கோ. தயாளன் தலைமையில் நடைபெற்றது.

புதிய கன்னியம் நகரில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி துனை அமைப்பாளரும், மாவட்ட கவுன்சிலருமான மோரை மு.சதிஷ்குமார் ஏற்பாட்டிலும் அன்னை தெரேசா கல்வி மற்றும் அறக்கட்டளை இல்லத்தில் ஆதரவற்றோர்களுக்கு மதிய அசைவ விருந்து மோரை க.இளமாறன் (இளைஞர் அணி வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம்) ஏற்பாட்டிலும் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆலத்தூர் ஏழுமலை, பமதுகுளம் அண்ணாதுரை, பொத்தூர் மாரி, பாலவேடு இரவிகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வந்த செய்தி!




### கட்பீஸ்.ப.சோமசுந்தர மூர்த்தி தலைமை!

## சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கம்!

### தா.இளையஅருணா, ஜே.ஜே.எபினேசர் துவக்கி வைத்தனர்!

சென்னை நவ:30

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் நீட் தேர்விற்கு எதிரான கையெழுத்து இயக்க முகாம் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி தலைமையில் (25-11-2023 சனிக்கிழமை) காலை இராயபுரம் சுழல்மெத்தை எம்.சி.ரோடு அருகில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள்: லயோலா.கே.மதன், இர.பொன்இளவரசன், இ.ரவிகுமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கையெழுத்து முகாமை மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வில் கிழக்கு பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார், பி.டி.பாண்டிசெல்வம், ஆர்.எம்.டி. ரவீந்திரன் மு.கோபி, கி. ராஜேந்திரன், என்.மருதுகணேஷ், எஸ்.பி.எஸ்.புத்தன், ரெயின்போ.என்.விஜயகுமார், இராயபுரம்.சு. சேகர், என்.ஏழுமலை, நெல்லை.எம்.எம்.சாமி, வெ.சு.சத்தியநாராயணன், ஜெ.காணிக்கைநாதன், க.கோவிந்தசாமி, லயன். எம்.தீனதயாளன், லட்சுமி வேலு, கார்த்திக் செங்குட்டுவன், பா.வேளாங்கன்னி, எம்.டி.மதன்ராஜ், கே.என். பார்த்திபன், தா.ஜெயபால், பி.சேகர், கு.சுந்தர்,கு. ரமேஷ், இ.மதன், ஜி.சதீஷ் குமார், எல்.சீனிவாசன், ஆர்.வி.கணேஷ், க.கோவிந்தராஜ், பி.கண்ணன்,பாலா லட்சுமணன்,எம்.ரவி, எரிமலை.பாலு, நாட்டாமை. கே.லட்சுமணன், எம்.என். வெங்கட், வி.குமார், அத்தோ முனுசாமி, எஸ். சுரேஷ், ஐசிஎப்.பழனி, எஸ்.யுவராஜ், ஜெ.சுரேஷ் பாபு, பி.ரவிசங்கர், மோ. ரவிகுமார், சு.சசிதரன், ஜெ.பிரேம்ஆனந்த், எஸ். கே.ரெடிமேட் செந்தில், சுவீஸ்.ஆர்.இளையராஜா, யு.ஹனிபா,த.ரவி எம்.எம். சந்துரு, எஸ்.குமார் ஆ.பாபு, எம்.லோகநாதன் சி.ஸ்ரீதர், வி.எஸ்.தங்கராஜ், மாரிமுத்து, ஆர்.கே.நகர் வெங்கடேஷ், மூ.வினோத் குமார், என்.அப்துல்மாலிக், எஸ்.எம்.தேவேந்திரன், பா.சக்திதாசன், வண்ணை தேவகி சண்முகம், எஸ்.சௌந்தரபாண்டியன், ப.ஆனந்த்குமார், ஆர்.தங்கராஜ், வி.பிரேம்குமார், எஸ்.எஸ்.சங்கர், ஆ. ஆனந்தன், வி.ராமசந்திரன், அ.ராஜேந்திரன், என். முத்து ஜி.கோதண்டராமன், க.பாலகிருஷ்ணன், ஏ.கதிரவன், ஏ.குமார், பி.சுதாகர், த.கு.பன்னீர் செல்வம், ஜி.விநாயகம், கே.கைலாசம், ஏ.குமார், இராயபுரம் ராஜ், எம்.டில்லிபாபு துரைநாராயணன், ஜி.உமாபதி, ஏ.சந்திரசேகர், ஜி.சம்பத், ஆ.ரமேஷ், ஆர். எஸ்.மணி, ஆர்.பி.சேகர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்: கா.ஸ்ரீதர் ஏ.சாந்த குமார், ஜி.விக்னேஷ்வரன், ஜி.பாலா, எஸ்.பரணி, ஆர். வடிவேலு, உதய்,நவீன்,ர. சிவா, ர.தமிழ் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இம்முகாமில் 534 நபர்கள் நீட் தேர்வை ரத்து செய்ய ஒன்றிய மோடி அரசை கண்டித்து தங்களின் கையெழுத்தை பதிவு செய்தனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## எண்ணூர் - கத்திவாக்கத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு இனிப்பு!

### பிரட் சுரேஷ் ஏற்பாட்டில் - கோமதி சந்தோஷ்குமார் எம்.சி. வழங்கினார்!

சென்னை, நவ.30

கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வழிகாட்டுதலோடு எண்ணூர் - கத்திவாக்கம் 2வது வட்டத்தில் அமைந்துள்ள அரசு ஆரம்பப் பள்ளியில் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியை மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் பிரட் சுரேஷ் ஏற்பாட்டில் 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ்குமார் இனிப்பு வழங்கினார்.

இதில் திருவொற்றியூர் மேற்கு பகுதி முன்னாள் துணை செயலாளர் இ. ரமேஷ், முன்னாள் நகரச் செயலாளர் அ.பாண்டியன், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் டி.தேசப்பன், 2வது வட்ட பகுதி ப் பிரதிநிதி பி.ரமேஷ், முன்னாள் நகரச் செயலாளர் எம்.மகேந்திரன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் பி.பட்டறையன், கழக உடன் பிறப்புகள் ஆர்.எஸ்.ரோடு முருகன், ஆர்.சுரேஷ், ராஜேஷ், மாரியப்பன், கார்த்திக், சுரேஷ், விக்கி, தயாளன் உட்பட பலர் கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு, புத்தகம், பேனா, இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் கழகத் தோழர்கள் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

## ஒன்றிய, நகர, பேரூர் கழக அணிகளின் நேர்காணல்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட ஒன்றிய நகர, பேரூர் கழக அணிகளின் நேர்காணல் வருகிற 01, 02.12.2023 - வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் எனது (க.சுந்தர்) தலைமையில் நடைபெற உள்ளது. நேர்காணல் நடைபெறும் கழக அணிகளின் விவரம் கீழ்கண்டவாறு


மாணவர் அணி, மகளிர் அணி, விவசாய அணி, வர்த்தக அணி, விவசாய தொழிலாளர் அணி, மகளிர் தொண்டர் அணி, பொறியாளர் அணி இலக்கிய அணி, கலை, இலக்கிய பகுத்தறிவு, அயலக அணி, நெசவாளர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, ஆதிதிராவிட நலக்குழு, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, மருத்துவ அணி, தொண்டர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி,

மேலே குறிப்பிட்டுள்ள கழக அணிகளின் பொறுப்புக்கு விருப்ப மனு அளித்தவர் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.



அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், 17வது வட்டம் தீயம்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள டீ கப் மினிஸ்டரி முதியோர் காப்பகத்தில் வசிப்பவர்களுக்கு, அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. வட்டச் செயலாளர் கே. கருணாகரன், சி. மூர்த்தி. எஸ். பாலாஜி, கே. சண்முகப்பிரியன், எஸ். சிவகுமார். சுதர் என்கின்ற சுதர்சன், விஜயன் ,எம் .என். அஜய் தென்னவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) தலைமைச் செயலகத்தில், பழ.அதியமான் அவர்கள் எழுதிய “வைக்கம் போராட்டம்” நூலின் கன்னட மொழிபெயர்ப்பு நூலினை வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், வைக்கம் போராட்டம் நூல் ஆசிரியர் எழுத்தாளர் பழ.அதியமான், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. இரா.கஜலட்சுமி, மொழிபெயர்ப்புப் பிரிவு இணை இயக்குநர் டாக்டர். சங்கர சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 12 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான 5 விடுதிக் கட்டடங்களையும் மற்றும் 2 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 6 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு பணிகள் நிறைவுற்ற பள்ளிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அனில் மேஷ்ராம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத் ஆகியோர் கலந்து கொண்டனர்.







முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 2 புதிய வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் 60 மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகள் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ள அச்சுற்றுலா பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளுக்கு சிற்றுண்டிகள் வழங்கி வழியனுப்பி வைத்தார்.




பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் **கோவை சிறுவாணி குடிநீர்த் திட்டம்.**



46

# இடம் பொருள் கலைஞர்





# கோவை சிறுவாணி குடிநீர்த் திட்டம்

## பொன்விழா காணும் 99 ஆண்டு ஒப்பந்தம்!



‘தென்னிந்தியாவின் மான்செஸ்டர்’ என்ற பெருமைக்குரியது தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மாவட்டம். ஜவுளி, கல்வி, மருத்துவம் என சகல துறைகளிலும் இன்று போலவே அன்றும் வேகமாக வளர்ந்து வந்தது இந்த மாநகரம். நகரம் வளர்ச்சி அடைய அடைய, மக்கள்தொகையும் பெருகிக் கொண்டே வந்தது.

ஒரு குறிப்பிட்ட பகுதி, நகர்மயமானால், அந்த மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி பெருகும் என்றாலும், அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பெரும்பாலான அரசுகள் மறந்துவிடுகின்றன. அப்படித்தான் 50 மற்றும் 60-களில் தமிழ்நாட்டை ஆண்ட காங்கிரஸ் கட்சியும் மறந்துவிட்டிருந்தது.

கோவை மாவட்ட மக்கள், தங்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கு, சிறுவாணி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வர வேண்டுமென்று நீண்டகாலமாகக் கோரிக்கை வைத்தபடி இருந்தனர்.

கோவையில் சிங்காநல்லூர் பகுதியில் இருந்து தன் திரைப்படப் பணிகளை மேற்கொண்டவர் அல்லவா கலைஞர்..? அதனால் அந்த மக்களின் கோரிக்கையில் இருந்த நியாயம் புரிந்தது. ஆகவே, அவர்களது குரலை 1966-ஆம் ஆண்டு மார்ச் 4 அன்று, சட்டமன்றத்தில் தி.மு.கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது எதிரொலித்தார்.

“சிறுவாணித் திட்டம் என்பது தமிழ்நாட்டின் எல்லையிலிருந்து இரண்டு பர்லாங்கு தூரத்தில் உள்ளது. கோவை நகரத்திற்கு 22 மைல் தூரத்தில் உள்ளது. கேரள மாநிலத்துடன் சேர்ந்துள்ள சிறுவாணிப் பகுதியிலிருந்து கேரள மாநில அரசின் உதவியோடு திட்டத்தை நிறைவேற்றி, கோவை மாநகர மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்திட வேண்டும்" என்றார்.

### வறட்சியில் எழுந்த சபதம்

கலைஞர் சட்டமன்றத்தில் வைத்த கோரிக்கையை அன்றைய அரசு நிறைவேற்றவில்லை. பிறகு 1969-இல் பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, முதலமைச்சராகப் பொறுப்பேற்றார் கலைஞர். அந்த ஆண்டு தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலவியது. அப்போது கோவை மாநகர மக்களுக்கு சிறுவாணி நீர்த் திட்டத்தை நிறைவேற்றி, குடிநீர் வசதி செய்து தருவேன் என்று உறுதி பூண்டார்.

தொடர்ந்து, 1969-ஆம் ஆண்டு மே 10-ஆம் தேதி அன்று, திருவனந்தபுரம் சென்று கேரள மாநில முதலமைச்சர் ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு அவர்களை சந்தித்து சிறுவாணித் திட்டம் குறித்து, பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் தொடர்ச்சியாக இருமாநில அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள், பலகட்ட பேச்சுவார்த்தை நடத்தினர்.

அவற்றின் அடுத்த கட்டமாக, ‘கோயம்புத்தூர் குடிநீர்ப் பெருக்குத் திட்டம்’ என்ற பெயரில், சிறுவாணி குடிநீர்த் திட்டக் கால்கோள் விழா 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் 15 -ஆம் தேதி அன்று நடைபெற்றது. அப்போது பேசிய முத்தமிழறிஞர் கலைஞர், “பெயர்தான் சிறுவாணியே தவிர, இப்பிரச்சினை கொடுத்த கஷ்டங்கள் பெரிய அளவாகும்” என்றார்.

### பனகல் அரசர் வழியில்...

இந்தத் திட்டம் தொடர்பாக 1970-இல் வெளியான செய்திக் குறிப்பு ஒன்றில், “இந்தத் திட்டத்தின் மூலம் சிறுவாணிப் பள்ளத்தாக்கில் 6,500 இலட்சம் கன அடி கொண்ட நீர்த் தேக்கத்தைக் கட்டி, குடிநீர் எடுக்க வசதியுள்ள அமைப்பு மூலம் தற்போதுள்ள சுரங்கப்பாதை வழியே, கோவை மாவட்ட எல்லைக்குள் உள்ள நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீர் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படும். சுத்திகரிக்கப்பட்ட பின்னர், 33 அங்குல விட்டமுள்ள குழாய் மூலம் நீர், கோவை நகருக்குக் கொணர்ந்து விநியோகிக்கப்படும். கோவை நகரத்துக்கும், நகரை ஒட்டியுள்ள சுற்றுப்புறச் சிற்றூர்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, மக்களின் நெடுநாள் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்படும்.

இத்திட்டத்திற்கு முதலீட்டுத் தொகையாக ரூ.6.33 கோடி ரூபாயும், ஆண்டொன்றுக்குப் பராமரிப்புச் செலவுக்கு ரூ.15 இலட்சமும் ஆகும். இம்முழுத் திட்டத்தையும் மூன்று வகையாகப் பிரித்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தற்பொழுது கிடைக்கும் குடிநீர் அளவு, ஐந்து மடங்கு அதிகமாகும்” என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவின் போது, “நீதிக்கட்சி ஆட்சி செய்த காலத்தில் முதலமைச்சர் பனகல் அரசர் அவர்கள் குடி தண்ணீர் திட்டத்துக்கு இங்கே இதே இடத்தில் 1935-இல் அடிக்கல் நாட்டினார் என்பதைப் பார்க்க நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நீதிக் கட்சியின் பாரம்பரியத்தில் வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசின் முதல்வனாக இங்கே வந்து சிறுவாணி குடி நீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!” என்றார்.

மேலும், “ஒரு மாதம் கழித்து, கருணாநிதி அடிக்கல் நாட்டினாரே, எங்கே தண்ணீர்? என்று கேட்பார்கள். அப்படிக் கேட்பவர்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியும். இந்தத் திட்டம் நிறைவேற 1.5 ஆண்டுகள் ஆகலாம். அப்பொழுது நானும் வந்து உங்கள் மகிழ்ச்சியில் பங்கு கொள்வேன்” என்றார் கலைஞர்.

### தண்ணீர்-அரிசி-மின்சாரம்

அந்தத் திட்டம் வேகமாக செயல்படுத்தப்பட்டு வந்த நிலையில், கேரளத்தில் அரசியல் மாற்றம் ஏற்பட்டு, அச்சுதமேனன் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். தொடர்ந்து, 1973-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19-ஆம் தேதி அன்று, இருமாநில அரசுகளுக்கிடையே, 99 ஆண்டுகளுக்கு முழுமையாக செயலில் இருக்கக்கூடிய சிறுவாணி குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றும் ஒப்பந்தம் ஏற்பட்டது.

அதன்படி கோவை நகரின் வீட்டு, சமூக மற்றும் தொழிற்சாலைப் பயன்பாடுகளுக்குத் தேவையான நீரைத் தேக்கிட (1,300 மில்லியன் கன அடி), தமிழ்நாடு அரசின் செலவில் கேரள அரசு சிறுவாணி அணையைக் கட்டி அதற்கான கேரள மாநில நிலத்தை தமிழ்நாடு அரசிடம் பராமரிப்புக்கு ஒப்படைத்தது.

தான் சொன்னது போலவே, அந்த ஆண்டு கோவையில் நடைபெற்ற சிறுவாணித் திட்டத்தின் திறப்புவிழாவில் கலந்துகொண்டார் கலைஞர். அவருடன், அச்சுதமேனனும் கலந்துகொண்டார். அப்போது பேசிய கலைஞர், “கேரளமும் தமிழ்நாடும் பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்கள். இவை ஒன்றுக்கொன்று எவ்வாறெல்லாம் உதவி கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்ற முறையில் கேரளத்திற்கு ஓர் ஆண்டிற்கு 15 ஆயிரம் டன் அரிசி வழங்கத் தயாராக இருக்கிறது தமிழகம்” என்றார்.

அவரைத் தொடர்ந்து பேசிய அச்சுதமேனன், “தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை வருகிறபோது, மின்சாரம் கொடுக்க கேரளம் தயாராக இருக்கிறது” என்றார்.

இவ்வாறு அந்த காலத்தில் அண்டை மாநிலங்களுக்கிடையே ஒரு நல்லுறவு நிலவியதற்கு இன்றும் சாட்சியாக இருக்கிறது சிறுவாணி..!

சிறுவாணி குடிநீர்த் திட்ட திறப்பு விழாவில், அன்றைய குடிநீர் வாரியத் தலைவராக இருந்த செ.கந்தப்பன் பேசும் போது, “சிறுவாணியிலிருந்து, கோவைக்குப் போதுமான அளவு குடிதண்ணீர் கிடைக்க வழி வகுத்துள்ளார் முதல்வர். குடிநீர்ப் பிரச்சினை இன்றோடு தீர்ந்துவிட்டது. எனவே, முதல்வருக்கு, ‘சிறுவாணி வென்றாய்’ என்ற சிறப்புப் பட்டத்தை, உங்கள் சார்பாக அளிக்கலாம் என்று எண்ணி உள்ளேன்...” என்றார்.

அவருக்குப் பின் கலைஞர் உரையாற்றும்போது, “என் அருமை கந்தப்பன், ‘சிறுவாணி வென்றாய்’ என்ற சிறப்புப் பட்டத்தை எனக்கு அளிக்கயிருப்பதாகக் கூறினார். ஏற்கெனவே எனக்குள்ள பல பட்டங்கள், மாற்றுக் கட்சிக்காரர்களிடம் சிக்கி, என்ன பாடுபடுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். ‘சிறுவாணி வென்றாய்’ என்ற பட்டத்தை, நாளை அவர்கள், ‘சிறுவா... நீ வென்றாய்!’ என்று, ஏளனமாய்ப் பேசக்கூடும். ஆகவே, நான் சிறுவனாக மாற ஆசைப்படவில்லை” என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

...வலம் வருவோம்

## அச்சில் ஏறாத கவிதை!

54-வது இந்திய சர்வதேசத் திரைப்பட விழா, கோவாவில் நவம்பர் 20-ஆம் தேதி முதல் 28-ஆம் தேதி வரை நடைபெற்றது. விழா நாட்களில், ‘தி பீக்காக்’ எனும் பெயரில் திரைப்பட விழா சார்ந்த செய்திகள், புகைப்படங்கள், பிரபலங்களின் படைப்புகள் ஆகியவற்றைத் தாங்கி வரும் நாளிதழ் வெளியிடப்படுவது வழக்கம்.

அந்த நாளிதழில், ஞாயிறு இதழில் (நவம்பர் 26) மறைந்த விஷ்ணுசூர்யா வாக் என்ற தலித் கவிஞரின் கவிதை, சித்தேஷ் கவுதம் எனும் சாதி எதிர்ப்பு ஓவியரின் ஓவியத்துடன் அச்சிடப் படுவதற்குத் தேர்வு செய்யப் பட்டிருந்தது. ஆனால், ஞாயிறு இதழில் அந்தக் கவிதை இடம் பெறவில்லை. ஓவியம் மட்டுமே இடம்பெற்றிருந்தது.

இதற்கு திரைப்பட விழாவை நடத்தும் அதிகாரிகள் எந்த விளக்கத்தையும் கொடுக்கவில்லை. இதைத் தொடர்ந்து அந்தக் கவிஞருக்கு ஆதரவாகப் பிரபலங்கள் குரல் எழுப்பி வருகின்றனர்.

அந்தக் கவிதையின் தலைப்பு ‘செக்யூலர்’. அதாவது, மதச்சார்பின்மை. அந்தக் கவிஞர் வாக் யார் தெரியுமா...? கோவாவின் செயின்ட் ஆந்த்ரே தொகுதியின் பா.ஜ.க. முன்னாள் எம்.எல்.ஏ..! சொந்தக் கட்சி, தலித் படைப்பாளிகளுக்கே இதுதான் நிலை.

## :ப்ளாஷ்பேக்



### சிவப்புக் கம்பள வரவேற்பு!

மண்டல் ஆணையை நிறைவேற்றி, வேலைவாய்ப்பில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை நிறைவேற்றியதற்காக இந்தியா முழுவதும் வி.பி சிங் அவர்களுக்கு எதிர்ப்பு கிளம்பியது. தமிழ்நாடு மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்தது. தமிழ்நாட்டில் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்த காரணத்தால், சமூக நீதிக் காவலர் வி.பி சிங் அவர்களுக்கு தமிழ்நாடு முழுக்க சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது உளுந்தூர் பேட்டையில் அளித்த வரவேற்பில், தலைவர் கலைஞர், ‘மண்டல் நாயகர்’ வி.பி சிங், எஸ்.ஆர்.பொம்மை ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.



இராமலிங்கம்

**-மருதூர் ஏ.இராமலிங்கம்,**
**இணைச் செயலாளர்,**
**ஆதிதிராவிடர் நலக்குழு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### மீண்டும் கலைப்பயணம்!

**1967-ஆம் ஆண்டு முதல் 1977-ஆம் ஆண்டு வரை கலைஞர் திரையுலகப் பணிகளில் நேரடியாகப் பங்குபெறவில்லை. 1978-ஆம் ஆண்டு, இயக்குநர் [கிருஷ்ணன்] பஞ்சு அவர்கள் இயக்கிய படம் மூலம் மீண்டும் திரையுலகப் பயணத்தைத் தொடங்கினார். கலைஞர் கதை, வசனம் எழுதிய அந்தப் படத்தின் தலைப்பு ‘நெஞ்சுக்கு நீதி’. அவர் எழுதிய நூலின் தலைப்பையே திரைப்படத்தின் பெயராக சூட்டப்பட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

315




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131